பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 07 புதன்கிழமை (19-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:123

### பயணிகள் கப்பல் சேவை

## வெளிவிவகார அமைச்சுடன் செஞ். குழு ஒப்பந்தம் செய்யும்

கொழும்பு,ஏப்.19

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்குவதற்கு முதல்படியாக வெளிவிவகார அமைச்சுடன் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த அமைப்பின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பல்களுக்கு வழித்துணை வழங்க எமது அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் விடுத்த உத்தியோகபூர்வமான வேண்டுகோளை ஏற்று அது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம்.

இதன் முதல்படியாக வெளிவிவகார அமைச்சுடன் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட இருக்கின்றோம்- என்றார் அவர்.

(12ம் பக்கம் பார்க்க)

## சிலாபம் - உடப்பில் 30 தமிழர்கள் கைது!

கொழும்பு,ஏப்.19

சிலாபம்-உடப்பு பகுதியில் நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை பொலீஸார் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது 30 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிலாபம் பகுதிகளில் உள்ள சுமார் 25 பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த 500 பொலீஸார் பெருமெடுப்பில் இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் சென்ற பொலீஸார் சகலரதும் அடையாள அட்டைகளைப் பரிசோதித்ததுடன் வீடுகளில் தேடுதலும் நடத்தினர்.

பொலீஸாரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் -

உடப்பை அண்டிய கடற்பகுதியூடாக விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளார்கள் எனக்கிடைத்த தகவலை அடுத்தே தாம் இந்தத் தேடுதலை மேற்கொண்டதாகவும்-சிலாபம் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

## 3 லொறிகளில் மருந்து வன்னிக்கு அனுப்ப முடிவு

வவுனியா,ஏப்.19

இராணுவக் கட்டுப்பாடற்ற மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு மூன்று லொறிகளில் மருந்துப் பொருள்களை எதிர்வரும் வெள்ளியன்று அனுப்பிவைப்பது என நேற்று வவுனியாவில் நடந்த பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வன்னி இராணுவ அதிகாரியான பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் வவுனியா அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் ரகுநாதபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவசர மருந்து வகைகளே இந்த லொறிகளில் எடுத்துச் செல்லப்படவிருப்பதாகவும் -

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஒரு லொறியும் மருந்து வகைகளை எடுத்துச் செல்லவிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

# இயக்கச்சியில் உக்கிரச் சமர்!

## மீண்டும் வெடித்தது

யாழ்ப்பாணம்,ஏப்ரல்19

**ஆனையிறவுக்கு வடக்கே - பளைக்கும் இயக்கச்சிக்கும் இடையே - மீண்டும் கடுஞ்சமர் வெடித்திருக்கின்றது.**

மருதங்கேணி, தாளையடி, முகாவில் பகுதிகள் ஊடாக முன்னேறிய புலிகள் நேற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில் பளையின் தென்புறப் பகுதியில் தமது தாக்குதல்களை ஆரம்பித்ததாகவும் -

கண்டி வீதியின் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் நேருக்கு நேர் மோதல்கள் இடம்பெறுவதாகவும் -

மாசார், சோரன்பற்றுப் பகுதிகளில் புலிகள் நிலை கொண்டிருப்பதாகவும் -

முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இச்சண்டை தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பின் தகவல்களைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

அரசுத் துருப்புக்களுக்கு பெருஞ்சேதத்தை ஏற்படுத்தி பெருமளவு பிரதேசத்தைத் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

உணர்ச்சிபூர்வ இராணுவச் செய்திகளுக்கு தற்பொழுது விதிக்கப்பட்டுள்ள தணிக்கையைக் கருத்தில் கொண்டு புலிகளின் அறிவிப்பில் இடம்பெற்றுள்ள மேலதிக விவரங்கள் இங்கு பிரசுரிக்கப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளன. (உ-3)

## ஸ்கந்தபுரத்தில் நாளை பேரணி!

வவுனியா,ஏப்.19

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டு வரும் தடை உத்தரவைக் கண்டித்து ஸ்கந்தபுரத்தில் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பேரணி ஸ்கந்தபுரம் டானியல் விளையாட்டரங்கத்தில் இருந்து ஆரம்பமாகி பிரதான வீதியூடாகச் சென்று மாவட்டச் செயலகத்தை அடையும்.

அங்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

பேரணியில் கலந்து கொள்வோர் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு மற்றும் சுகாதார நெருக்கடிகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டும் வகையிலான சுலோக அட்டைகளையும்,படங்களையும் எடுத்துச் செல்வர் எனவும்- வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (உ-7)

### சுவாமியின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து மிரட்டி

## மட்டு.இராமகிருஷ்ண மிஷனில் ஒன்றரை லட்சம் ரூபா கொள்ளை

மட்டக்களப்பு,ஏப்.19

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணமிஷன் இல்லத்துக்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த ஆயுதக் கோஷ்டி ஒன்று அந்த மிஷன் தலைவர் ஜீவானந்தஜி மகராஜை துப்பாக்கி முனையில் மிரட்டி ஒன்றரை லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற சமயம் சுவாமியுடன் 89 மாணவர்களும், ஐந்து பணியாளர்களும் அங்கு இருந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

ஆயுதம் தாங்கிய மூவர் இல்லத்தின் பின்பக்க வழியால் உள்ளே நுழைந்தனர். அச்சமயம் மாணவர்கள் விடுதி மண்டபத்தில் தூங்கிக் கொண்டிருந்தனர். சுவாமி பராமரிப்பாளர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

உள்ளே நுழைந்த மூவரில் ஒருவர் சுவாமியின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து "சத்தம் எதுவும் போடக்கூடாது" என்று மிரட்டியுள்ளார்.

மின் விளக்கை அணைத்துவிட்டு மாணவர்கள் தூங்கும் மண்டபத்துக்குச் செல்லுமாறு பணியாளர்களை அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

"யாராவது சத்தம் போட்டால் சுவாமியைச் சுட்டு விடுவோம்" என்றும் அவர்களை எச்சரித்துள்ளனர் கொள்ளையர்.

துப்பாக்கி முனையில் சுவாமியைப் பணம் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அழைத்துச் சென்ற கொள்ளையர் சுவாமியைக் கொண்டு அலுமாரியைத் திறக்க வைத்து அங்கிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பினர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (உ-க-3-21)

### மட்டக்களப்பில்

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் இடைநிறுத்தம்!

மட்டக்களப்பு,ஏப்.19

நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமெனக்கோரி கடந்த 21 தினங்களாகச் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மட்டக்களப்பு மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று முதல் தமது போராட்டத்தை இடைநிறுத்திக் கொண்டனர்.

அடுத்த மாத நடுப்பகுதிக்குள் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என மாகாண ஆளுநர் மற்றும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அளித்த வாக்குறுதிகளை அடுத்து உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்து

(12ம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் நினைவுநாள் இன்று

மட்டக்களப்பு,ஏப்.19

இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை அர்ப்பணித்த அன்னை பூபதியின் பன்னிரண்டாவது நினைவுதினம் இன்றாகும்.

இதனையொட்டி இராணுவக் கட்டுப்பாடற்ற மட்டக்களப்பு, வன்னிப்பகுதிகளில் நேற்று உண்ணாவிரதங்கள் இடம் பெற்றன.

மட்டக்களப்பில் படுவான்கரைப் பகுதியில் பல சந்திகளிலும் அன்னையின் உருவப்படங்கள் வைக்கப் பட்டு அங்கு உண்ணாவிரதங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கொக்கட்டிச்சோலையில் இன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. வன்னியிலும் இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அன்னைபூபதி நினைவாக துண்டுப் பிரசுரங்கள் யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் நேற்று விநியோகிக்கப்பட்டன. யாழ்.பல்கலைக்கழகத்திலும் பல சுவரொட்டிகள்காணப்பட்டன. (உ-3-7)

## ராஸிக் குழு உறுப்பினர்கள் ஐவர் கொள்ளை தொடர்பாகக் கைது!

### ஆயுதங்கள், பணத்தில் ஒரு பகுதி ஆகியனவும் மீட்பு!

மட்டக்களப்பு,ஏப்.19

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணமிஷன் இல்லத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இராணுவ தேசிய துணைப்படையான ராஸிக் குழுவின் ஐந்து உறுப்பினர்களைத் தாங்கள் கைது செய்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்பட்ட கல்லடியைச் சேர்ந்த அன்ரனி என்பவரைக் கைது செய்து விசாரித்ததாகவும் -

அதன் பின்னர் மட்டக்களப்பு நகரில் வைத்துக் கல்முனையைச் சேர்ந்த விஜயராசா, அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் ஆகியோரையும் மற்றும் இருவரையும் தாங்கள் கைது செய்ததாகவும் - பொலீஸார் தகவல் வெளியிட்டனர்.

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட கிரனேட் மற்றும் ஆயுதங்களும், கொள்ளையிடப்பட்ட பணத்தில் அறுபதினாயிரம் ரூபாவுக்கு அதிகமான தொகையும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலீஸ்

(12ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பிறந்து நான்கு நாளே ஆன குழந்தையைக் காணோம்!

## சரசாலை வடக்கில் சம்பவம்

பிறந்து நான்கு நாள்களே ஆன குழந்தை ஒன்று காணாமல் போன சம்பவம் கடந்த வியாழனன்று சரசாலைப் பகுதியில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கையிலாயபிள்ளை பிரியா (வயது 20) என்ற இளம்பெண்ணின் குழந்தையே காணாமல் போயுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தையைப் பிரசவித்த பின்னர் வீடு திரும்பிய அப்பெண் தனது வீட்டில் குழந்தையுடன் படுத்திருந்தபோது இனந்தெரியாத சிலரால் அதிகாலை ஒரு மணியளவில் குழந்தை எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் படையினரிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6-31)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 30th June, 2000 for the undermentioned posts.

### FACULTY OF AGRICULTURE

1. Professor in Agronomy
2. Professor in Agricultural Economics
3. Professor in Agricultural Biology/ Agricultural Chemistry/ Agricultural Engineering/ Animal Science.

### FACULTY OF ARTS

1. Professor in Tamil
2. Professor in Education
3. Professor in Linguistics
4. Professor in Saiva Siddhantha (Endowment Chair)
5. Professor in Economics
6. Professor in Fine Arts

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

1. Professor in Business Administration/Commerce.

### FACULTY OF MEDICINE

1. Professor in Anatomy
2. Professor in Community Medicine
3. Professor in Pathology
4. Professor in Forensic Medicine
5. Professor in Pharmacology
6. Professor in Paediatrics
7. Professor in Medicine
8. Professor in Obstetrics & Gynaecology
9. Professor in Surgery.

### FACULTY OF SCIENCE

1. Professor in Statistics
2. Professor in Organic Chemistry
3. Professor in Physical Chemistry
4. Professor in Botany
5. Professor in Marine Biology

| Post | Salary Scale |
|---|---|
| PROFESSOR | Rs. 23,600 - 8x550 - 28,000 p.m |

Note:- In addition to the above salary, an academic allowance of 30% of the salary approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka** either in person or by sending a Money Order for Rs.20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10cm in size.

Separate application forms should be sent for each post.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel thier applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
University of Jaffna,
Sri Lanka.
17th April, 2000. (C/11890)

# 170 தாதி உத்தியோகத்தர்களுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவிவரும் தாதி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையில் 170 தாதி உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐந்து விசேஷ தர தாதி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்ட போதும் அவர்களில் எவரும் இங்கு பதவியேற்கவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 104 பேர் தாதியர் பயிற்சியினை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றனர். இவர்களில் 30 பேர் தமது பயிற்சியினை ஜூலை மாதத்தில் நிறைவு செய்து வெளியேறவுள்ளனர்.

பயிற்சியின் பின் இவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நியமனம் வழங்கப்பட்டால் தாதி உத்தியோகத்தர் வெற்றிடங்களில் சிறுதொகையை சமாளிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்வுக்குப் பின் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள சகல வார்ட்டுகளும் படிப்படியாகத் திறக்கப்பட்டபோதும் 19,25,26ஆகிய மூன்று வார்ட்டுக்களும் திறக்கப்படவில்லை. வலிப்புநோய், நரம்பியல்நோய், கண் (பெண்கள்) போன்ற மூன்று வார்ட்டுக்களும் திறக்கப்படவில்லை.

இந்த வார்ட்டுக்கள் இயங்காத போதிலும் இந்த நோயாளர்களுக்கு ஏனைய வார்ட்டுக்களில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. (இ-5-9)


**99 O/L**
மாணவரை வாழ்த்தி
**A/L 2002**
கலைப்பிரிவு

தமிழ் - அருந்தா
Log. - S.S மனோகரன்
இ.நா - MR
புவி. - திருக்குமார்
நா.அர. - கந்தவேள்
பொதுவினா- அம்பி
ஆங்கி. - சுப்ரமணியம்

ஆரம்பம்
21-04-2000
9.00 a.m.

**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர்
(75540)



**ராஜா**
யாழ்ப்பாணம்
அஜித், ஷாலினி
நடிப்பில்
**அமர்க்களம்**
காட்சிகள்
10.30, 2.30
(C/11604)



**நாகம்ஸ்**
சுன்னாகம்
ரஜனி, சௌந்தர்யா,
ரம்பா, செந்தில்
நடிப்பில்
**அருணாச்சலம்**
காட்சிகள்
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11760)



**லிபேட்டி**
அச்சுவேலி
இன்றும் நாளையும்
கார்த்திக், சுபலட்சுமி
நடிப்பில்
**கோகுலத்தில் சீதை**
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223
(75258)


## சடலம் கரை ஒதுங்கியது

மட்டக்களப்பு, காரைதீவு கடற்கரையில் கடந்த 15ஆம் திகதி மாலை 4 மணியளவில் 45 வயது மதிக்கக்கூடிய ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது.

இச்சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் பொது மக்களினால் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


**கொழும்பு விலையில்**
வெள்ளைச்
சப்பாத்துக்கள்
பெற்றுக் கொள்ள
**கணபதி ஷூ சென்றர்**
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(75524)


## பன்னாலையில் கருத்தரங்கு

தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பன்னாலைக் கிராமத்தில் கால்நடை வளர்ப்புச் சம்பந்தமான கருத்தரங்கொன்று எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ள இக்கருத்தரங்கினை பன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழைப் பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி செ.மகாதேவன் ஏற்பாடு செய்துள்ளார்.

இப்பகுதியில் அண்மைக் காலச் சம்பவங்களின்போது கால்நடைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள், அழிவுகள் பற்றிய புள்ளிவிவரக் கணக்கெடுப்புக்களும் இந்தக் கருத்தரங்கில் இடம் பெறவுள்ளன. (3-152)

# ஆத்ம சாந்தி வழிபாடு

அன்னை மடியில்
1953 - 02 - 21



இறைவன் அடியில்
2000 - 03 - 06

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட

**அமரர் இரத்தினம் ஸ்ரீகாந்தன்**
(தொலைத்தொடர்பு பரிசோதகர் - ரெலிகொம் நிறுவனம்)

அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாடு இன்று (19-04-2000) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
திருமதி சி.ஸ்ரீகாந்தன்
ஆனைக்கோட்டை. (75537)


குளிர்மையின் மறுபெயர்!
**NIPPON**
இலங்கையில்
அதிகூடிய தெரிவு 30ற்கும்
மேற்பட்ட மாதிரிகள்

மின்விசிறிகள்
- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC.

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18, Keyzer Street, Colombo - 11
T.P:- 437735, Fax:- 437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 04 Tel: 589992.

# தமிழ்மொழி மூல ஆசிரியர் தெரிவு
# நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
யாழ். கல்வி வலயத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த தமிழ் மொழி மூல ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறமாட்டாது என்று யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கல்விப் பணிமனையின் முன்பு ஆரம்பக் கல்விப் பாடநெறிக்கு ஆசிரியர் தெரிவுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டத்தை அடுத்து அன்று நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை தடைப்பட்டது தெரிந்ததே.

இதனையடுத்து வடக்கு—கிழக்கு மாகாணகல்வியமைச்சின் செயலாளருடன் கல்விப் பணிப்பாளர் தொடர்பு கொண்டதை அடுத்து அவர் மேற்படி நேர்முகப்பரீட்சையை ஒத்தி வைக்குமாறு கூறியதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(இ-10)

## அறிவியல் அரங்கம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
யாழ். மாட்டின் வீதியில் உள்ள நியூ பிறைற் கல்வி நிலையம் மாதாந்தம் நடத்தி வரும் அறிவியல் அரங்கம் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு மேற்படி கல்வி நிலையத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு இலவசமாக பொது அறிவுக் கையேடு வழங்கப்படவுள்ளது. (க)

## அரியாலைப் பகுதிகளில் தொடரும் திருட்டுக்கள்

அரியாலை, ஏப்ரல் 19
அரியாலைப் பகுதியில் கடந்தசில நாள்களாகத்திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அரியாலை மேற்கு, ஆனந்தன் வடலி, தபாற்கட்டைச் சந்தி போன்ற பகுதிகளிலேயே திருட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இரவு நேரங்களில்—ஊரடங்கு அமுலில் உள்ள வேளை திருடர்கள் வீடுகளில் ஓடுகளைப் பிரித்தும் யன்னற் கம்பிகளை வளைத்தும் வீட்டினுள் புகுந்து மிகவும் தந்திரமாகத் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

ஆனந்தன் வடலி, தபாற்கட்டைச் சந்தி போன்ற இடங்களில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் இரு வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இப் பகுதியில் தொடரும் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-17)

## பண்ணைப் பாலத்தின் இரும்புத் தகடுகள் சேதம்

பண்ணை — அல்லைப்பிட்டி இணைப்புப் பாலத்தில் உள்ள சங்கிலிப் பாலத்தின் இரும்புத்தகடுகள் துருப்பிடித்துப் பழுதடைந்த நிலையில் உள்ளன. இப்பாலத்தின் வழியாகச் செல்லும் வாகனங்களை மிகவும் சிரமப்பட்டே வீதிக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாக வாகனச் சாரதிகள் கூறுகின்றனர்.

பஸ் பயணிகள் இப் பாலத்தை இறங்கிக் கடக்க வேண்டியுள்ளது. பாரத்துடன் வரும் லொறிகளும் சில சமயங்களில் பொருள்களை இறக்கிப் பின் ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளது. கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக பழுதடைந்து கிடக்கும் இப்பாலத்தைத் திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

(ஜ-111)

## உயிரிழந்த மேலும் 10பேர் விவரம்

வவுனியா, ஏப்ரல் 19
தொடரும் ஓயாத அலைகள் 3' நடவடிக்கையின் போது உயிரிழந்த புலிகளில் மேலும் 10 பேரின் பெயர் விவரங்களைப் 'புலிகளின் குரல்' வானொலி நேற்று அறிவித்தது.

★ மைதிலி (கிளிநொச்சி)
★ அருள்மகள் (தியாகராசா விஜியகுமாரி — யாழ்ப்பாணம்)
★ மருதா (மகேந்திரம் நகுலேஸ்வரி—யாழ்ப்பாணம்)
★ வதனி அல்லது வினோதி (விக்கேஸ்வரன் சுதர்சினி—மாங்குளம்)
★ ஈழவேங்கை (பொன்னையா வதனி —முல்லைத்தீவு)
★ கனியவள் (கருப்பையா சிவனேஸ்வரி—முல்லைத்தீவு)
★ மதுஷா அல்லது மாதவி (செல்வராசா ஜெயந்தினி யாழ்ப்பாணம்)
★ அமுதினி (இரத்தினசிங்கம் சுபாசினி—முல்லைத்தீவு)
★ இயல்விழி(ஐயம்பிள்ளை யோகேஸ்வரி—வவுனியா)
★ பிரியங்கா (தர்மரட்ணம் சுபாஜினி— வவுனியா)

(இ-9)

## பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளுக்குசமுகமளித்தனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப் பட்டதை அடுத்து நேற்று முன்தினம் மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளித்தனர்.

பளை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் சிக்குண்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் எனறு கோரி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டமை தெரிந்ததே.

இதனையடுத்து மாணவர் ஒன்றியத்தால் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டதைத் தொடர்ந்து திங்கள் முதல் அவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளித்து வருகின்றனர்.

திங்களன்று புதிய வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் ஆரம்பமாகின. இரண்டாம் வருட கலை மற்றும் வர்த்தக பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் திங்களன்று பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பின் முதற் கலைத் தேர்வுக்கான பரீட்சைகளும் ஆரம்பமாகின.

(இ-10)

## வலி. மேற்கு பிரதேச செயலக கட்டடத் திறப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வலி.மேற்குப் பிரதேச செயலகக் கட்டடத் திறப்புவிழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வலி. மேற்குப் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெறும்.

சங்கானை பஸ் நிலையத்திற்கு அண்மையில் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள இந்தக் கட்டடத் திறப்புவிழாவில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் உட்படப்பலர் கலந்து கொள்வர்.

ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. கே. ஜெகனின் சார்பில் ந. திரிலோகநாதன் இக் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

நீண்டகாலமாக வலி.மேற்கு பிரதேச செயலகத்துக்கென நிரந்தரமான கட்டடம் எதுவும் இல்லாத நிலையில் வசதிகள் குறைந்த தனியார் கட்டடங்களில் இப் பிரதேச செயலகம் இயங்கி வந்தது.

தற்போது புதிய கட்டடம் கேட்போர் கூடம் உட்பட அனைத்து வசதிகளும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் வலி. மேற்குப் பிரதேச செயலகத்தின் அனைத்துக் கரும பீடங்களும் இப்புதிய கட்டடத்திலேயே செயற்படவுள்ளன.

ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் சங்கானை சமூக சேவைகள் அமைப்பினது முயற்சியினால் இந்தச் செயலகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-க-29-99)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பாலஸ்தாபனக் கும்பாபிஷேகம் நாளை வியாழக் கிழமை காலை 7.32 மணி முதல் 9.19 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

சிவாகம கிரியாதத்துவநிதி சிவப்பிரம்மஸ்ரீ ராம்–செகங்காதரக் குருக்கள் பாலஸ்தாபனக் கிரியைகளை மேற்கொள்வார். (க)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 19
தெல்லிமாநகர் கருணைமிகு ஸ்ரீகாசிவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் சதய நட்சத்திரத் தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [க-30]

★ ★ ★

நீர்வையூர் கோவையூர் உரும்பிராய் கிழக்குத் திருக்கரந்தன்பதி அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் சமேத சிவபூத நாதேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-30)

★ ★ ★

குருநகர், ஏப்ரல் 19
நாவாந்துறை சென். நீக்கலஸ் ஆலயத் திருநாள் கொண்டாட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

(க-51)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 17 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு: —

**சங்கானை**
(141089ஏ), (141766ஏ),

**சாவகச்சேரி**
(136199ஏ), (140916ஏ), (141016ஏ),

**யாழ்ப்பாணம்**
(136075ஏ), (136198ஏ),

**கோப்பாய்**
(124135ஏ), (124135பி), (133956ஏ), (133956பி), (134136ஏ), (134136பி), (136430ஏ), (136430பி), (136490ஏ), (136490பி), (136510ஏ), (136510பி), (136538ஏ), (136538பி), (136543ஏ), (136548ஏ), (136548பி), (136548சி), (136595ஏ), (136608ஏ), (136631ஏ), (136633ஏ), (136639ஏ), (136647ஏ), (136647பி), (136647சி), (136647டி), (136647ஈ), [136647எவ்], [136648ஏ], [136648பி], [136655ஏ], [13655பி], (136655சி], [136655டி], (136656ஏ), (136656பி), (136657ஏ), (136657பி), [136658ஏ), (136658பி), (136660ஏ), (136676ஏ), (139870ஏ), (139871ஏ), (143208ஏ), (143210ஏ), (143210பி), (143210சி), (143210டி), (143220ஏ), (143220பி)

**நல்லூர்**
(133308ஏ), (136093ஏ), (136200ஏ), (136740ஏ), (136740பி), (136744ஏ), (136856ஏ), (136863ஏ), (136863பி), (136867ஏ), (136867பி), (136867சி), (136867டி), (140896ஏ), (140909ஏ), (140930ஏ), (141101ஏ), (143226ஏ), (143226பி)

**சண்டிலிப்பாய்**
[138148ஏ], [139569ஏ], [139681ஏ], [139681பி], [141225ஏ], [141225பி], [141767ஏ], [141767பி],

**தெல்லிப்பழை**
[139927ஏ], [139927பி],

**உடுவில்**
[136343ஏ], [136350ஏ], [136350பி], [136395ஏ], [136568ஏ], [136568பி],

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடிதங்களைச் சேர்க்குமாறு தெரிவிப்பு

நாளை வியாழக்கிழமை இங்கிருந்து புறப்படவுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படவுள்ளதால் கடிதங்களை அனுப்பவிருப்பவர்கள் இன்று புதன்கிழமையே தங்கள் கடிதங்களைப் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபால் அதிபர் தெரிவித்துள்ளார். (ஏ-135-1)


## 97 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 — 09 — 1974



உதிர்வு 14 — 01 — 2000

### செல்வன் முதலி பகீரதன்
(பருத்தித்துறை நகராட்சி மன்ற ஊழியர்)

எழுதெழுதென் றேயெழுதும் பிரம்மன் ஏனோ
இப்படியும் எழுதி வைத்துத் தொலைத்து விட்டான்
பழுதறியாப் பண்புடைய மகனே! உன்னைப்
பறித்தெடுக்க ஏனாசைப்பட்டான் ஐயா!
வழுவதனைச் செய்து விட்டான் எமனும் சேர்த்து
வாடியழுதுருக்குலைந்து மாளுகின்றோம்
தொழுமவன் காலன் காலில் நாமும் வந்து,
சேரும் வரை நம் துயரம் ஆறாதையா!

எமது அன்புச் செல்வம் பகீரதனின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினர், பரு. தெ. ப. உ. கூட்டுறவுச் சங்கத்தினர் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

புலோலி மத்தி,
பருத்தித்துறை.

(75541)

## நடமாடும் செயலக சேவை கைதடி மேற்கில் நடைபெறும்

தென்மராட்சி, ஏப்ரல் 19
தென்மராட்சி பிரதேச செயலகத்தின் இரண்டாவது நடமாடும் சேவைப் பிரிவு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00மணி முதல் மாலை 5.00 மணி வரை கைதடி மேற்கு சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 12 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகள் இந்த நடமாடும் செயலகத்தில் கவனிக்கப்படுமென பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

முதலாவது நடமாடும் செயலகம் கடந்த மாதம் எழுதுமட்டுவாழ் வடக்கில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஏப்ரல் 19
தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆத்மீக சஞ்சிகையான 'ஞானச்சுடர்' சித்திரைமாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் மா. பரமானந்தன் வெளியீட்டுரையையும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் ப. கணேசலிங்கம் மதிப்புரையையும் நிகழ்த்துவார்கள். (ஐ-173-30)

## குடாநாட்டில் வெப்ப காலநிலை

அரியாலை, ஏப்ரல் 19
குடாநாட்டில் கடந்த சில தினங்களாகக் கடும் வெப்பமும் வரட்சியுமான காலநிலை நீடிக்கிறது. இதனால் பொதுமக்கள் மத்தியில் வெப்ப நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

கண்நோய், சின்னமுத்து, அம்மைநோய் என்பனவற்றால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோழிகளும் வெப்பத்தினால் தூக்க நோய்க்கு இலக்காகிவருகின்றன. (ஐ-17)

## தரகர்களை அப்புறப்படுத்த அரசாங்க அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
யாழ். மாவட்ட செயலக வாசலுக்கு வெளியே தரகு வேலைகளில் ஈடுபடுவோரை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டு வருகிறார்.

செயலக வாசலுக்கு வெளியே பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் பெற்றுத் தருவதாகக்கூறிப் பலர் தரகு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களை அப்புறப்படுத்துவதற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தினால் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை எதுவும் பயனளிக்கவில்லை.

இந்த நிலையில்தான் தற்பொழுது யாழ். அரச அதிபர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். (இ-5)

## பளை கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் உடைத்துத்திருட்டு

தென்மராட்சி, ஏப்ரல் 19
பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் களஞ்சியம் மற்றும் முகமாலை இத்தாவில் ஆகிய கிளைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் வீச்சு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த வேளையில் இந்தக் கிளைகள் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—
பளை நகரப் பகுதியில் உள்ள பளை நகரம் மற்றும் முள்ளிப்பற்று ஆகிய சங்கக் கிளைக் கடைகளும் எரிபொருள் விற்பனை நிலையமும் கடந்த திங்கட்கிழமை முதல் திறந்து வியாபாரம் நடைபெற்று வருவதாக சங்கப் பொது முகாமையாளர் சி. கணேசலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

## விவரங்கள் சேகரிப்பு

தென்மராட்சி, ஏப்ரல் 19
பச்சிலைப்பள்ளி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான விவரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றன.

இன்று யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இடம்பெயர்ந்து தங்கியுள்ளவர்களின் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட விருப்பதால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தாம் தற்போது தங்கியுள்ள பகுதி கிராம அலுவலரிடம் விவரங்களை வழங்கி ஒத்துழைக்குமாறு பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-117)

## தேசியஇளைஞர் சேவைமன்ற கலாசாரப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் இளைஞர் விருது வழங்கலுக்கான கலாசாரப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாவட்ட மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் மே 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

நாடகம், குறுநாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை, நடனம், சங்கீதம், சுவரொட்டி போன்ற பலதுறைகளில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் 15 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் மட்டுமே பங்குபற்ற முடியும் போட்டிகள் தொடர்பான விவரங்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## அச்சுவேலியில் மக்கள் வங்கி கிளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
அச்சுவேலியில் மக்கள்வங்கியின் கிளை ஒன்று விரைவில் திறக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தினால் வடபிராந்திய மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது

அச்சுவேலி பிரதேசசபைக் கட்டடத்தில் இந்த வங்கிக் கிளை திறக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—
சங்கானையிலும் மக்கள் வங்கிக் கிளை ஒன்று திறக்கப்படவுள்ளது. (ஐ-5)

## பிரபாவுக்குநிலத்தின்கீழ்மாளிகை சிங்கள நாளிதழ் கூறுகிறது

கொழும்பு, ஏப்ரல் 19
விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக வாழ்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை என்ற இடத்தில் நிலத்தின் கீழ் மாளிகை ஒன்று அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள வார இதழ் ஒன்று தெரிவிக்கின்றது.

சிறிதாவது வெளியே தெரியாத வண்ணம் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மாளிகையைப் பாதுகாக்க ஆயுதம் தரித்த 700 விடுதலைப் புலிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட மீனவரும்வேறு பலரும் இந்த நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் இந்த மாளிகையின் நிர்மாணப் பணிகள் கடந்தஐந்து ஆண்டுகளாக நடைபெற்றன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சீவரத்தினம் சிவசுப்பிரமணியம்

தோற்றம் 28–10–1947 மறைவு 19–04–1996

திதி: 06–05–2000

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துன்புறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கண்டி வீதி,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(75326)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 21 – 01 – 1929



உதிர்வு: 20 – 03 – 2000

### அமரர் நன்னியர் வேலுப்பிள்ளை

(சின்னத்தம்பி)

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊருக்கு உத்தமனாய்
உறவினர்க்கு உறுதுணையாய் இருந்து
விண்ணுலகை நீங்கள் அடைந்து
ஒரு திங்கள் சென்றதப்பா!
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்ற எம் தெய்வமே!
உங்கள் பசுமை நினைவுகள்
எங்கள் உள்ளங்களில் என்றும் நிழலாடும்

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவால் நாம் தவிக்கும் வேளை அனுதாபச் செய்திகளையும் ஆறுதல் வார்த்தைகளையும் தெரிவித்து அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சகல விதத்திலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.

10/4, மதவடி ஒழுங்கை,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

(75504)


உ

ஆனைக்கோட்டை

## திருவருள்மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம் பிரம்மோற்ஸவ விஞ்ஞாபனம்

### விக்கிரம வருடம் 2000

| | | | |
|---|---|---|---|
| 19-4-2000 | புதன்கிழமை | கொடியேற்றம் | முற்பகல் 11-00மணி |
| 1-5-2000 | திங்கட்கிழமை | சப்பறம் | மாலை 6-00 மணி |
| 2-5-2000 | செவ்வாய்க்கிழமை | தேர்த்திருவிழா | பகல் 10-00 மணி |
| 3-5-2000 | புதன்கிழமை | தீர்த்தம் | காலை 9-00 மணி |

உற்சவ காலங்களில் பிரதி தினமும்
மாலை 6-00 மணிமுதல் 7-00 மணி வரை
இதிகாஸ சொற்பொழிவு "வியாசர் விருந்து"
சைவத் தமிழ் நிதி பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்கள்
(B. A. Hons)

★ அடியார்கள் அனைவரும் வருக! ஐங்கரன் அருளைப் பெறுக
சுபம்.

இறைதிருத்தொண்டில்
சோமசிவகுமாரக் குருக்கள்

(75508)

## பந்தயங்களைச் சட்டபூர்வமாக்க ஆலோசனை

புதுடில்லி, ஏப்ரல் 19

கிரிக்கெட் போட்டிகளை வைத்து நடத்தப்படும் பந்தயங்களைச் சட்டபூர்வமாக்குவது குறித்து இந்திய அரசு ஆலோசனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

'கனவான்களின் விளையாட்டு' என்று மதிக்கப்பட்ட கிரிக்கெட்டில் இப்போது லஞ்சமும் ஊழலும் பெருகி வீரர்களின் நம்பகத் தன்மை சர்ச்சைகளுக்குரியதாகி வருவதே இந்திய அரசின் இந்த முடிவுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-ரி]

### செச்சினிய மனித உரிமை மீறல்கள்

# ரஷ்ய அதிபர் புடினுக்கு மரணதண்டனை விதிப்பு!

## லண்டன் ஷரியத் நீதிமன்றம் அறிவித்தது

லண்டன், ஏப்ரல் 19

செச்சினியாவில் ரஷ்யப் படையினர் புரிந்த அட்டூழியங்களுக்காக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினு(க்கு) லண்டனில் உள்ள இஸ்லாமிய மதவாத அமைப்பு ஒன்று விதித்த மரணதண்டனையை நிறைவேற்றுமாறு பிரிட்டனில் இயங்கும் அல முஜாஹிதீன் என்ற இஸ்லாமிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்ய அதிபர் லண்டனுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இந்தத் தருணத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிரிட்டனில் இயங்கும் இஸ்லாமிய ஷரியாச் சட்ட நீதிமன்றம் புடினுக்கு எதிராக மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் இந்தத் தண்டனையைநிறைவேற்ற முயல வேண்டும். என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தி சற்றானிக் வேஸஸ்' என்ற நாவலை எழுதியமைக்காக பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட மரணதண்டனையை ஒத்ததே இந்தத் தண்டனையும் என்று அந்த அமைப்பின் தலைவர் தெரிவித்தார்

(இ-6-9-ரி)

## ரஷ்யாவில் முதலிடுமாறு புதிய அதிபர் அழைப்பு

லண்டன், ஏப்ரல் 19

ரஷ்யாவில் முதலீடு செய்யுமாறு வெளிநாட்டவருக்கு அதிபர் விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள புடின் லண்டன் தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

ரஷ்யாவின் பிரச்சினைகள் சிக்கலானவை. அரசியல் ஸ்திரமற்ற தன்மையும் அதில் ஒன்றாக இருந்தது

ஆனால் இப்போது அப் பிரச்சினை வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு விட்டது எனவும் அவர் பேலும் கூறினார்.

முன்பு இரும்புத்திரை நாடு என்று வர்ணிக்கப்பட்ட ரஷ்யாவின் அதிபராக கோர்பச்சேவ் இருந்த போது புதிய பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியிருந்தார்.

அதன்பின் தற்போது புடின் வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்றுள்ளார். பொருளாதார நிர்ப்பந்தங்களே இதற்குக் காரணம் எனக் கருதப்படுகிறது.

(இ-6-9-ரி)

## குடும்பஸ்தரைக் கொன்ற குரங்கு

புதுடில்லி, ஏப்ரல் 19

இந்தியத் தலை நகரான டில்லியில் கிழக்குப் பகுதியில் குரங்குகளின் அட்டகாசத்தினாலே குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாகப் பலியானார்.

தொடர் மாடிக் கட்டடத்தில் தான் புதிதாக வாங்கிய வீட்டைப் பார்வையிட மனைவியுடன் வந்த அரவிந்த்-ஜா என்பவரே உயிரிழந்தவராவார்.

அரவிந்த்-ஜா தனது மனைவியுடன் கீழ்த்தளத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது மேல் மாடியில் இருந்த பெரியபூச்சாடிகள்சிலவற்றை குரங்குகள் தள்ளி விட்டன.

அதில் ஒரு ஜாடி நேராக அரவிந்த்-ஜாவின் தலையில் விழுந்ததால் அவர் உடனடியாக அந்த இடத்திலேயே மரணமானார். அவரின் மனைவி தெய்வாதீனமாகக் காயம் எதுவுமின்றித் தப்பிவிட்டார்.

கடந்த சில மாதங்களாகவே கிழக்கு டில்லியில் குரங்குகளின் தொல்லை எல்லை மீறி விட்டதாக டில்லி வாசிகள் கூறுகின்றனர்.

டில்லி நகரில் 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரையான குரங்குகள் கட்டுப்பாடுகள் ஏதுவுமின்றி சுதந்திரமாக உலாவுவதாகவும், பிரதம மந்திரி அலுவலகத்திற்குள் கூட அவை நுழைந்து வருவதாகவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

(இ-6-9-ரி)

## வடகொரியாவுடன் ஆஸ்திரேலியா மீண்டும் இராஜதந்திர உறவுகள்

சிட்னி, ஏப்ரல் 19

வடகொரியாவுடன் முழு அளவிலான ராஜதந்திரத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்த ஆஸ்திரேலியா முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா 25 ஆண்டுகளின் முன் தெளிவான காரணங்கள் எவற்றையும் தெரிவிக்காமலேயே வடகொரியாவுடனான தனது உறவை முறித்துக்கொண்டது

தற்போது உலக நாடுகளிலிருந்து பெருமளவில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளவடகொரியாவுடன்மீண்டும்உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

கொரியக் குடாப் பகுதியில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்காகவே ஆஸ்திரேலியா வடகொரியாவுடனான இராஜதந்திரத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்த முடிவு செய்துள்ளதாகக் கருதப்படுகிறது.

(இ-6-9-ரி)

## ஊர்வலம் நடத்திய 600 பேர் வாஷிங்ரனில்பொலீஸாரால்கைது

வாஷிங்ரன், ஏப்ரல் 19

அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரில் நடைபெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்) ஆகியவற்றின் மாநாடு நடைபெறும் இடத்தில் ஊர்வலம் நடத்திய 600பேரை அமெரிக்கப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளுக்கு இந்த அமைப்புகள் அளவுக்கு மீறிக் கடன் வழங்குவதை எதிர்த்து அமைதியான முறையில் ஊர்வலம் நடத்தியோரே கைதுசெய்யப்பட்டனர்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் அமெரிக்காவின் ஷியாற் நகரில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் மாநாட்டின் போது இடம்பெற்ற வன்முறைகள் போன்று தற்போதும் நடைபெறாது இருப்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-9-ரி-9)

### உலக அரங்கில்

## ருவாண்டாவின் புதிய அதிபர்

கம்பாலா, ஏப்ரல் 19

ருவாண்டாவின்புதிய அதிபராக முன்னாள் கிளர்ச்சித் தலைவர் பால் கெஹன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சாள்ஸ் முலிகண்டியை விட 76 வாக்குகள் அதிகமாகப் பெற்றுக் கெஹன்வெற்றி பெற்றார்.

(இ-6-9-ரி)

## பதவி விலகுவதாக அறிவிப்பு

சிங்கப்பூர் சிற்றி, ஏப்ரல் 19

இந்த ஆண்டு நடைபெற உள்ள பொதுத் தேர்தலுடன் தான் பதவி விலகப் போவதாக சிங்கப்பூர் பிரதமர் அறிவித்துள்ளார்.

புதிய தலைமுறை அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கும் வகையில் தான் பதவி விலகப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(இ-6-9-ரி)

## அகதிகள் நாடு திரும்பினர்

பிறிஸ்ரீனா, ஏப்ரல் 19

கொசோவோவில் யுத்தம் இடம்பெற்ற சமயம் அங்கிருந்து தப்பிச் சென்று ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்த கொசோவோ அகதிகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் இரவு தமது நாடு திரும்பி உள்ளனர்.

(6-9-ரி)

## ஷெரீப் மீதான தீர்ப்பை எதிர்த்து மனுத் தாக்கல்

இஸ்லாமாபாத் எப்ரல் 19

பாகிஸ்தானில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோரி பாகிஸ்தான் அரச தரப்பு வழக்கறிஞர் சிந்து மாகாண மேல்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

(இ-6-9-ரி)

## விசாரணை

சர்வதேச பயங்கரவாதி என அமெரிக்காவினால் குற்றஞ்சாட்டப்படும் சவூதி அரேபிய கோடீஸ்வரரான ஒஸாமா பின்லேடனின் சகாக்கள் எனக் கருதப்படும் 28 பேர் மீதான விசாரணைகள் நாளை வியாழக்கிழமை ஜோர்தான் நாட்டு அரச பாதுகாப்பு நீதிமன்றில் ஆரம்பமாக உள்ளது.

ஜோர்தானில் உள்ள அமெரிக்க தூதரகம் உட்பட பல அமெரிக்க கேந்திர நிலையங்களைத் தாக்க இவர்கள் முயற்சி செய்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.வழக்குவிசாரணைகள் ஆரம்பிக்கும் போது 15 பேர் மட்டுமே நீதிமன்றில் ஆஜராகி இருப்பர் என்றும் ஏனைய பேர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படாமலேயே விசாரணைகள் நடக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்

## சகாவைக் கொன்ற அமைச்சர்கள் இருவருக்கு மரணதண்டனை

### சமோஆ நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு

அப்லா, ஏப்ரல் 19

சமோஆ என்ற நாட்டில் சக அமைச்சர் ஒருவரைக் கொன்ற இரு அமைச்சர்களுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்று தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது

இந்தக் கொலையில் தொடர்புடைய மற்றுமொருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த லுகாலா லேவன் காமு என்பவரை விழா ஒன்றில் வைத்து தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த போது சுட்டுக்கொன்றதாகப் பெண்கள் விவகார அமைச்சர் லெவா வைடல், தொலைத்தொடர்பு அமைச்சர் டோல் அகுசோ உட்பட மூவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக விசாரணை நடத்திய நீதிமன்றமே மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளது.

சமோஆ நாட்டு வரலாற்றில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ 6-9-ரி)

## மக்கள் குறோஸ்னி திரும்ப அனுமதி

மொஸ்கோ, ஏப்ரல் 19

செச்சினியத் தலைநகர் குறோஸ்னியில் இருந்து இடம்பெயர்ந்து வெளி இடங்களுக்குச் சென்ற குறோஸ்னி மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்று மொஸ்கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் எத்தனை பேர் தமது வீடுகளுக்குத் திரும்புவார்கள் என்று தெரியவில்லை ஏனெனில் குறோஸ்னியை விட்டு அகதிகளாக வெளியேறிச் சென்றவர்களில் பலர் தமது இடங்களுக்குத் திரும்புவது குறித்து ஒரு தெளிவற்ற நிலையிலேயே இருந்து வருகின்றனர். தற்போதும் தொடரும் சண்டைகளே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது வீடுகளுக்குத் திரும்பும் மக்களுடன் தீவிரவாதிகளும் நகருக்குள் நுழைந்துவிடாது இருப்பதற்காக ரஷ்யப் படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்

(6-9-ரி)

## தென் லெபனானில் இருந்து ஜூலைக்குள் படை வாபஸ்

### ஐ. நா செயலருக்கு இஸ்ரேல் அறிவிப்பு

நியூயோர்க், ஏப்ரல் 19

தெற்கு லெபனானில் இருந்து எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் இஸ்ரேலியப் படையினர் ஒரு தலைப்பட்சமாக வாபஸ் பெறப்படுவர் என்று இஸ்ரேலிய அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்றையும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் லெவி ஐ. நா பொதுச் செயலர் கோபி அனானுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளிடம் இருந்து இஸ்ரேலிய மக்களைப் பாதுகாப்பதற்காக தெற்கு லெபனானில் எமது படையினரை நிறுத்தி வைக்க வேண்டிய தேவை எமக்கு இருந்தது என்று அந்தக் கடிதத்தில் டேவிட் லெவி குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தை செய்தியாளர்களிடம் வாசித்துக் காட்டிய ஐ. நா அலுவல்களுக்கான இஸ்ரேலிய அதிகாரி ஜெ நடா லான்கிறி லெபனானுடனான சர்வதேச எல்லைக்கோட்டுப் பகுதியில் இருந்து ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் இஸ்ரேலியப் படையினர் வெளியேறிவிடுவர் என்று தெரிவித்தார். ஆனால் படை வாபஸ் எப்போது ஆரம்பிக்கும் என்று அவர் கூற மறுத்து விட்டார்.

(இ-6-9-ரி)

## புதிய சட்டமூலம்

டொரான்ரோ, ஏப்ரல் 19

கனடாவிற்குள் சட்டவிரோதமாக ஆள்களை அழைத்து வருபவர்களுக்கு 10 லட்சம் கனேடிய டொலர்கள் அபராதமும் ஆயுள் தண்டனையும் வழங்க வழி செய்யும் சட்ட மூலம் கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் போலிக் கடவுச்சீட்டுக்கள், மற்றும் அடையாள அட்டைகளைத் தயாரித்து அகதிகள் என்ற பெயரில் குவிபவர்களைக் கட்டுப்படுத்தவே இந்த சட்டம் கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-6-9-ரி)

# கிளிநொச்சி வைத்தியசாலையின் எக்ஸ்-றே பிரிவு செயல் இழப்பு

## அவசர நோயாளர்களுக்கு உயிராபத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19ஏ து.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் 'எக்ஸ்—றே' பிரிவு செயலிழந்தமையால் அங்குள்ள அவசர நோயாளர்கள் பலர் உயிரிழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்

வன்னியில் உள்ள கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் 'எக்ஸ்—றே' பகுதி கடந்த 10ஆம் திகதி தொடக்கம் எரிபொருள் மற்றும் இரசாயனப் பொருள்கள் இல்லாமையால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதி வைத்தியசாலைகளுக்குரிய முதலாம் காலாண்டுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் எனப்பல பொருள்கள் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் 'எக்ஸ்—றே' பகுதியும் செயலிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கண் சிகிச்சைக்கான மருந்துகளும் கிளிநொச்சி வைத்தியசாலையில் முடிவடைந்துள்ளமையால் கண் சிகிச்சைகள் நடைபெறாது என்று மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். [இ-10]

## வீதிச்சுற்று வளைவு

வலி-வடக்கு ஏப்ரல் 19

காங்கேசன்துறை வீதியில் மருதனார் மடம் சந்தியில் மீண்டும் தற்காலிக வீதி சுற்று வளைவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (இ.86)

# தேசிய ஒற்றுமைக்கு பாடுபடும் 37 பேருக்கு இன்று கௌரவம்

கொழும்பு, ஏப்ரல் 19

தேசிய ஒற்றுமை, ஐக்கியம் இன ஒற்றுமை ஆகியவற்றுக்காகத் தத்தமது துறைகளில் பணியாற்றியவர்களில் 37 பேருக்கு இன்று விசேட கௌரவம் அளிக்கப்பட உள்ளது.

இன்று கொழும்பில் இடம்பெற உள்ள இந்த வைபவத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு முதன்மை வழங்கப்படும் எனவும்—

மாலை கலாசார நிகழ்வுகளும் விருது வழங்கும் நிகழ்வும் நடைபெறும் எனவும்—

நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுகளில் பல முக்கிய அமைச்சர்களும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்து கொள்வர். (இ-8)

## நிரந்தரக்கட்டடம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் உள்ள பாரதி சனசமூக நிலையத்துக்கு நீண்டகாலத் தேவையாக இருந்து வந்த நிரந்தரக் கட்டடம் தற்போது வலி. தென்மேற்கு பிரதேச சபையினரால் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. (இ.8)

## நாடக விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

நீர்வேலி வடக்கு, காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் நாடகவிழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

காமாட்சியம்பாள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இரவு 7-30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நாடக விழாவில், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் கவின்கலை மன்றத்தினரின் ''சத்தியவான் சாவித்திரி'' நாட்டிய நாடகமும், நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலைய மகளிர் குழுவின் ''காத்தவராயன்'' சிந்துநடைக் கூத்தும் நடைபெறவுள்ளன. (3-15)

## போட்டிகள்

சங்கானை, ஏப்ரல் 19

புத்தாயிரமாம் ஆண்டை முன்னிட்டு சங்கானை தெற்கு மாவடி சனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் போர்த் தேங்காய் அடித்தல், தயிர்முட்டி அடித்தல் ஆகிய போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் நிலைய முன்றலில் நடைபெறவிருக்கின்றன. (3-29)

## இராமகிருஷ்ண மிசன் உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பல்வேறு வகைகளிலும் இராமகிருஷ்ண மிசன் உறுப்பினர்கள் உதவிகளை அளித்து வருகின்றனர்.

அம்பன் பகுதியில் உள்ள 195 குடும்பங்களுக்கு, இராமகிருஷ்ணமிசன் இலங்கைக் கிளையின் உபதலைவர் பெரிய சுவாமியின் பணிப்பின் பேரில் படுக்கை விரிப்புக்கள், துவாய்கள், 150 பிளாஸ்ரிக் வாளிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை—

தும்பளை ஓத்து மாதா ஆலயம், கற்கோவளம் செபஸ்தியான் ஆலயம், அம்பன் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் உள்ள இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு தினமும் பால்மா கரைத்து வழங்கப்பட்டு வருகின்றது. (இ-8)

## பூட்டப்பட்ட நிலையில் கட்டடம்

வலி. வடக்கு, ஏப்ரல் 19

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் இன்னும் பூட்டப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றது.

கடந்த ஆண்டு 15 லட்சம் ரூபாசெலவில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

வடமாகாண புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகாரசபையினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து இந்த கட்டடம் மீள கட்டப்பட்டமை தெரிந்ததே. நூலகம் மற்றும் விளையாட்டுக்கழகம் உட்பட பல்வேறு அமைப்புகளும்இயங்குவதற்காக இந்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. (இ-86)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தன் சின்னப்பிள்ளை

நாவற்குழி கிழக்கு தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தன் சின்னப்பிள்ளை நேற்று (18-04-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பவளம், ராஜதுரை, கமலா தவமணி, பகவதி, ஜெகராஜசிங்கம், உலகநாதன் (லண்டன்), துரைசிங்கம், தங்கமலர், இந்திரராஜா (சுவிஸ்), இராசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், இராசம்மா மற்றும் கனகையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று[19-04-2000] புதன்கிழமை அன்னாரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**இ. ராஜதீபன்**
[பேரன்]

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்

[75555]

## கந்தையா நமசிவாயம்

அல்வாய் தெற்கு நவமஹாலைச் சேர்ந்த கந்தையா நமசிவாயம் அவர்கள்நேற்று (18-04-2000) செவ்வாய்க்கிழமை அமரத்துவமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் ஏக புத்திரனும், திருமதி நவமலர், திருமதி மகேந்திரமலர், யோகரத்தினம் [இலங்கை வங்கி, சாவகச்சேரி], திருமதி பன்னீர்ச்செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையாரும் சி. இராசரத்தினம், க. விவேகானந்தன், இ. பாமதாஸன், திருமதி யோ. ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ச. தருமரத்தினம் (இ. போ. ச. கோண்டாவில்) அவர்களின் அன்பு பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18—04—2000) செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ந. யோகரத்தினம்**
(இலங்கை வங்கி, சாவகச்சேரி)

'கோகுலம்',
அல்வாய் தெற்கு.

(75551)

## திருமதி றோஸ் மனோரஞ்சினி

பண்டத்தரிப்பைச் சேர்ந்த றோஸ் மனோரஞ்சினி சேவியர் சூசைப்பிள்ளை 17-04-2000 திங்கட்கிழமை அன்று சுவிஸ்லாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் சேவியர் சூசைப்பிள்ளையின் அன்புமிகு மனைவியும் காலஞ்சென்ற பிறைசூடி மற்றும் ருத்புஸ்பமணியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை கவினம்மாவின் பாசமிகு மருமகளும் ரஜோபன், பிரியாந்தி, நிசாந்தி, நிஜோபன் ஆகியோரின் அன்புமிகு தாயாரும் றீற்றா பூலோகேந்திரன் குடும்பம் (பிரான்ஸ்), ராணி திலகசூரியர் குடும்பம் (பண்டத்தரிப்பு), ராஜி மனோகரன் குடும்பம் (பிரான்ஸ்), ரோமா இராமநாதன் குடும்பம் (பிரான்ஸ்), ரூபி பகீரதன் குடும்பம் (ஆஸ்திரேலியா), ரதி இம்மானுவேல் குடும்பம் (சுவிஸ்) ஆகியோரின் பாசம் மறவாச் சகோதரியும் யேசுதாசன் தவம் குடும்பம் (ஜேர்மனி) அவர்களின் அருமைமிகு மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி பிறைசூடி ருத்புஸ்பமணி (தாய்),**
**திருமதி ராணி திலகசூரியர் (சகோதரி)**

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

(75553)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு 09 — 01 — 1925



இறப்பு 20 — 03 — 2000

## அமரர் கந்தையா இராசரத்தினம்

(ஆசைப்பிள்ளை வாத்தியார்)
(ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய முன்னாள் அதிபர்)

ஆசைப்பிள்ளை நீ — பிள்ளை எம்மை
அருமையாய் பெற்றெடுத்தாய்
அரவணைத்தாய் அன்பு செய்தாய் அனாதையாக்கி
அம்மா பின் ஏன் சென்றாய்

எமது தந்தையின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று புதன்கிழமை 10-00 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

ஸ்ரீ சண்முகானந்தா வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

((75556)

# மரண அறிவித்தல்

## கந்தையா தனபாலசிங்கம்

(சிவலிங்கம்)

(பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை)

நுணாவில் சந்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் நேற்று (18. 04- 2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா—தனபாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தங்கமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், ஈஸ்வரராஜா (ஜேர்மனி), வனஜா (ஜேர்மனி), சுவிர்தன் (கொழும்பு), மகிந்தன்(கனடா), கருணநேசன் (சாவ.டிறிபேக்கல்லூரி A/L 2ஆம் ஆண்டு மாணவன்) ஆகியோரின் தந்தையாரும் லதா (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், ரங்கேலன் (ஜேர்மனி), கிருஷிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேரனும், பரஞ்சோதி, பத்மநாதன் (குரு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொ. தங்கராசா, திருமதி பத்மாவதி மனோகரன், சுசீலாதேவி, ரவீந்திரன், பாக்கியதேவி, காலஞ்சென்றவர்களான செல்வராசா, துரைராசா மற்றும் லீலாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19. 04. 2000) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2. 00 மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**த. வசந்தாதேவி**
(மனைவி)

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(75554)

உதயன்

## தலையிட்டு ஆவன செய்க!

வன்னியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நோயாளர் பலர் சிகிச்சை இன்றியே உயிரிழக்கும் பேரவல நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் மருத்துவ சேவையில் ஈடுபட்டிருக்கும் எம். எஸ். எவ். என்ற பிரெஞ்சு மருத்துவக்குழு இந்தத் திடுக்கிடும் தகவல்களை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

வன்னியில் உள்ள அரச ஆஸ்பத்திரிகளுக்கான மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்லும் முயற்சி கூட, பாதுகாப்பு அமைச்சின் அனுமதி என்ற வேலியால் தடுக்கப்பட்டிருப்பதாக எம். எஸ். எவ். அமைப்பு தெளிவுபடுத்தியுள்ளது.

வன்னியில் உள்ள நமது இரத்தங்களை — சகோதரங்களை — தனது நாட்டின் மக்கள் என்று கூறிக் கொள்ளும் சிங்கள அரசு, அவர்களுக்குரிய மருந்துப் பொருள்களை அங்கு அனுப்பவிடாது தடுத்து, எங்கள் சகோதரங்களை மருத்துவ வழியின்றிச் சாகும் அவல நிலைக்குத் தள்ளியுள்ளது.

யுத்த அவலத்திற்கும் நெருக்குதல்களுக்கும் மத்தியில் சிக்கியிருக்கும் வன்னி மக்களுக்குத் தொல்லை மேல் தொல்லை கொடுக்கும் நடவடிக்கைத் தொடரின் மற்றோர் அங்கம்தான் இது.

உலகில் தற்பொழுது எத்தனையோ நாடுகளில் இன யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் எந்த ஒரு நாடாவது மருந்தை ஆயுதமாகப் பயன்படுத்தி ஓர் இனத்தை நசுக்க முயலவில்லை.

''எங்களுக்கு யுத்தம் புலிகளுடன்தான்; தமிழ் மக்களோடு அல்ல'' என்றே சர்வதேச உலகுக்குப் பரப்புரை செய்யும் ஸ்ரீலங்கா அரசும் பாதுகாப்புப் படைகளும் புலிகளுக்கு மருந்துப் பொருள்கள் செல்லக் கூடாது என்ற காரணத்தைக் காட்டி வன்னியில் உள்ள அப்பாவி மக்களின அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பறிக்க முயல்வது கண்டிக்கத்தக்கது; அடிப்படை மனிதநேயப் பண்புகளுக்கு ஒவ்வாதது; அநாகரிகமானது. எந்தவித சாட்டுப்போக்குகளைச் சொல்லியும் இதனை நியாயப்படுத்த முடியாது.

இலங்கையில் காணாமற் போனோர் விவகாரத்தில் அரசாங்கத்தின் போக்கை — நடவடிக்கைகளை — செயற்பாடுகளை — இங்கு நேரில் வந்து விசாரித்த ஐ. நா. நடவடிக்கைக் குழு அரசின் செயற்திறனின்மையை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அதேபோல—

அப்பாவி மக்களின் அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பறித்து அவர்களின் உயிரோடு விளையாடும்— அந்த மக்களின் சட்ட ரீதியான அரசு தானே என்று கூறிக்கொள்ளும் — ஸ்ரீலங்கா அரசின் இந்த சுகாதாரவசதி மறுப்பு நடவடிக்கைகளையும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற சர்வதேசப் பொது அமைப்புகள் விசாரித்து உண்மை நிலையை அம்பலப்படுத்த வேண்டும்.

அந்த மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் உரிய மருத்துவ வசதிகள், மருந்துப் பொருள்கள் அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசர— அவசிய— நடவடிக்கைகளையும் இந்தப் பொது அமைப்புகள் செய்தாக வேண்டும்.

மனிதநேயப் பணியில் ஈடுபட்டிருக்கும் பொது அமைப்புகளின் தார்மீகப் பொறுப்பு இது.

# வன்னிக்கான மருந்துத் தடையை நீக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

## புதுக்குடியிருப்பு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பியது

வவுனியா, ஏப்ரல் 19

எழுபது சதவீதம் வெட்டப்பட்ட நிலையிலேயே இதுவரை வன்னிக்கான மருந்துப் பொருள்கள் ஸ்ரீலங்கா அரசினால் அனுமதிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது மிகுதி முப்பது சதவீத மருந்துப் பொருள்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதுக்குடியிருப்பு வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுகளில் புதுக்குடியிருப்பில் மாவட்ட மருத்துவமனையும் மல்லாவியில் சுற்றயல் கூற்று மருத்துவமனையும் மத்திய மருந்தகங்களும் மகப்பேற்று நிலையங்களும் இயங்கி வருகின்றன.

தொற்றுநோய்ப் பாதிப்பையும் நுளம்புத் தொல்லைகளையும் அதிகமாகக் கொண்டுள்ள பிரதேசம் வன்னி ஆகும்.

வன்னியில் மலேரியாவினால் பெரும்பாலான மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருந்துகள் மீது விதித்துள்ள தடை தற்போதுள்ள நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும்.

வன்னிப் பகுதிக்குத் தேவையான மருந்துகளில் எழுபது சதவீதமானவை வெட்டப்பட்டு முப்பது சதவீதம் மட்டுமே காலாண்டு ஒன்றுக்கு வந்து சேர்கின்றது.

கடந்த ஆண்டின் 4 ஆம் காலாண்டுக்கான மருந்துகளும் இந்த ஆண்டின் முதற் காலாண்டுக்கான மருந்துகளும் வன்னி மருந்துக் களஞ்சியங்களை வந்தடையவில்லை.

### போதிய ஆள்கள் இல்லை

போதிய பணியாளர்கள் இன்றி மருத்துவ அதிகாரிகள் சிகிச்சை அளிக்க முடியாது திணறுகின்றார்கள். மருந்துத் தட்டுப்பாடு காரணமாக புதுக்குடியிருப்பு மாவட்ட மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு ஒரு வாரம் மட்டுமே இயங்கக்கூடிய நிலை உள்ளது.

இந்த மருத்துவமனைகளில் மருந்துக் கடைகளில் மருந்துகளைப் பெறுமாறு சிட்டைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் மருந்துக் கடைகளில் மருந்துகள் கிடைப்பதில்லை.

சில நோய்த் தடுப்பு மருந்துகள் கூடக்கிடைப்பதில்லை. இதனால் சிறுவர்களே மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

உலக சுகாதார அமைப்பு சிபார்சு செய்த அவசிய தேவையான தடுப்பு மருந்துகள் கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. போலியோ மருந்துகளை குழந்தைகளுக்கு வழங்குமாறு செய்தித் தொடர்பு ஊடகங்கள் விளம்பரம் செய்கின்றன. ஆனால் கடந்த ஆண்டு போலியோ மருந்து விநியோகத்துக்கான திகதி கடந்த பின்பும் மருந்து வந்து சேரவில்லை.

மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவுக்கு நோயாளர்கள் செல்ல போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வாரத்துக்கு இரு நாள்கள் மட்டும் நோயாளர் வாகனத்துக்குஅல்லது அம்புலன்ஸ்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. முல்லை மாவட்டத்துக்கு ஒரே ஒரு நோயாளர் வாகனம் அல்லது அம்புலன்ஸே உள்ளது. இது அனைத்து நோயாளிகளையும் கொண்டு செல்லப் போதுமானது அல்ல.

அவசர அறுவை சிகிச்சைகளை தனது வரையறைக்கு உட்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி மேற்கொள்கிறார், எளிமையான சிக்கலற்ற அறுவை சிகிச்சைகளைச் செய்ய மட்டும் இங்கு உபகரணங்கள் உள்ளன. அறுவைச் சிகிச்சைகளுக்கு நோயாளிகள் வவுனியா வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மருத்துவமனைச் சாதனங்களைப் பயன்படுத்த மின் பிறப்பாக்கிகளுக்கும் போதிய எரிபொருள்கள் வழங்கப்படுவதில்லை. குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்கான திரிபோசா போன்ற போசாக்கு உணவு வகைகள் போதியளவு அனுப்பப்படுவதில்லை.

மலேரியாவை ஓரளவாவது தடுப்பதற்கான மலத்தியோன் குறைந்த அளவே அனுப்பப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சின் மருத்துவக் குழு கடந்த ஆண்டு மலத்தியோனின் அளவைவெட்டியது. முதல் காலாண்டுக்கான மலத்தியோன் இன்னும் இங்கு வந்து சேரவில்லை.

படையினரின் அனுமதிக்காக வவுனியாவில் காத்திருக்கும் மருந்துகளை வன்னிக்கு எடுத்துவர உடன் அனுமதி அளிக்க வேண்டும், காலாண்டுக்கான மருந்துகளின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். மலத்தியோன் வகைகளைத் தடைசெய்யக்கூடாது. மருத்துவப் பணியாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அறுவைச் சிகிச்சைக்கு அவசியமான மருந்துகளை அனுமதிக்க வேண்டும்.

முல்லைமாவட்ட மருத்துவமனைக்கு மேலும் ஒரு நோயாளி வாகனத்தை வழங்க வேண்டும். மாதாந்த எரிபொருள் அளவு அதிகமாக்கப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட அளவு திரிபோசா, மருந்துகள் என்பன அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலக்கண, இலக்கிய நூல்களை சிறுவயதிலிருந்து கற்கவேண்டும்

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

வடமராட்சி, ஏப்ரல் 19

தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை பிள்ளைகள் சிறுபராயத்திலிருந்தே கற்க வேண்டும். இந்நூல்களைக் கற்பதனால் தமிழ் அறிவை விருத்திசெய்து கொள்ளலாம்.

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'தமிழ் அலை' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச் செயலாளரும், எழுத்தாளருமான ஜோசப்பாலா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது சிறார்கள் மத்தியில் தமிழ் அறிவு குறைந்து வருகிறது. தாய் மொழியான தமிழில் போதிய அறிவு ஆற்றல்களை அனைவரும் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படிப்பதன் மூலம் தமிழ் அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அறிவியல் ரீதியாகச் சிந்திக்கும் நோக்குடன் எதிர்கால சமூகத்துக்கு ஏற்றவாறு காலத்தின் தேவை கருதி இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. நாட்டில் தமது பகுதியில் ஏற்பட்டுள்ள இன்றைய இக்கட்டான ஒரு நிலையில் இதுபோன்ற தரமான நூல்கள் தாராளமாக வெளிவர வேண்டும்— என்றார்.

இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் சே. ஏகாம்பரநாதன் பேசுகையில் கல்வியில் நாட்டமும், பொது அறிவுத்தேடலும் வளர்ச்சி பெற இவ்வாறான நூல்கள் அவசியமாகும்— என்றார்.

இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் எஸ். முருகேசம்பிள்ளையும் உரையாற்றினார்.

நூலாசிரியர் குழுசார்பில் எஸ். தவராசா பதிலுரை நிகழ்த்தினார். (இ-173)

நாளை

சித்திரை 8

வியாழக்கிழமை

திதி: துதியை

பின்னிரவு 1.01 வரை.

நட்சத்திரம்: விசாகம்

பின்னிரவு 5.05 வரை

சுபநேரம்: 7.31 9.01

ராகுகாலம்: 1.31 - 3.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

மனிதனுக்குப் பற்றுதலால் விருப்பமும், விருப்பத்தால் சினமும், சினத்தால் மயக்கமும், மயக்கத்தால் புத்தி நாசமும், புத்திநாசத்தால் அழிவும் ஏற்படுகிறது.

- பகவத் கீதை

## பிரார்த்தனை மண்டபம் புனரமைப்பு

திருநெல்வேலி, ஏப்ரல் 19

வண்ணை - நாவலர் மகா வித்தியாலய பிரார்த்தனை மண்டபம் சுமார் இரண்டரை இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மண்டபத்தின் முன்பக்கத்தில் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டு புதுமெருகுடன் மண்டபம் காட்சி அளிக்கின்றது.

யாழ். கல்வித்திணைக்களமும் நாவலர் தர்மகர்த்தா சபையினரும் வழங்கிய நிதியைக்கொண்டு புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மகாவித்தியாலய அதிபர் தெரிவித்தார். [இ-135]

## அச்சுவேலி பகுதியில் இளைஞன் கைது

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் தாம் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாக 512 ஆவது படையணியால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வநாயகபுரம், அச்சுவேலியைச் சேர்ந்த எஸ். ரவிராஜன் என்ற இளைஞரே கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து இராணுவத்தால் 'ரிசீற்' வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் அதிகாரி தெரிவித்தார். (இ-10)

## நல்லூர் செயலர் பிரிவில் 1, 911 விதவைகள்

கொக்குவில். ஏப்ரல் 19

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 1, 911 விதவைகள் வதிவதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இந்த விதவைகளின் கணவர்களில் 187 பேர் வன்செயல்களினாலும் 135 பேர் விபத்துக்களினாலும் 1529 பேர் இயற்கைக்காரணங்களினாலும் இறந்துள்ளனர் என்றும் 60 பேர் காணாமற் போனோர் மற்றும் கைவிடப்பட்டோர் எண்ணிக்கையில் அடங்குவதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-69)

## பாடசாலைக்கு காணி நன்கொடை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பௌதிக வளத்தேவையை ஓரளவுக்கு நிறைவேற்றும் நோக்கத்துடன் பாடசாலை பழைய மாணவர் சங்கம்— பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து பாடசாலைக்கு அருகாமையில் ஐந்து பரப்புக் காணியைப் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளன. (8)

## தவக்காலச் சிந்தனை

43 ஆம் நாள்

அன்னையாம் திருச்சபையால் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் நிறைந்த புனித வாரத்தில் எம் தவக்காலச் சிந்தனையானது சுமார் 3 வருடங்களாக ஒன்றாக உண்டு உறங்கி, உறவாடி அவராலேயே தெரிவு செய்யப்பட்ட சீடன் யூதாஸ்கரியோத் கேவலம் 30 வெள்ளிக் காசுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்த பேராசையையும் தன்னலத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வகையான செயற்பாடுகள் இன்றைய நம் சமுதாயத்தில் மலிந்து காணப்படுகிறது. பதவிக்காக, பட்டத்திற்காக, சுயநலத்திற்காக தம் சொந்த இரத்தங்களையே காட்டிக் கொடுக்கும் முகமூடி போர்த்த வேடதாரிகள் நம்மில் எத்தனை பேர்? கிறிஸ்தவ விழுமியங்களுக்குள் தன்னை அர்ப்பணித்து வாழ வேண்டியவன் மாறாக கிறிஸ்தவத்திற்குரிய பண்பையே இழந்து நிற்கின்றான். அதே வேளை குற்றமற்ற யேசு பிலாத்து முன்னிலையில் தீர்ப்பளிக்கப்படும்போது அவரது பதில் மௌனமொழிதான். ஆனால் எனக்கு இந்நிலையேற்படின் குற்றவாளியாக குனிந்து நிற்பேனா அன்றேல் கொக்கரித்து மற்றவனையும் நீதிமன்றங்களுக்கும் காவலரண்களுக்கும் இழுத்துச் செல்வேனா?

கு. தவம்

[மானிப்பாய்]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த பாலச்சந்திரன் கிறிஸ்ரி அன்ரனி எனபவரது விசேட அ.அ (இல. 0905006516) 15-04-2000 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் அல்லது T.P No. 3228, 3229 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (75519)

---

வட்டு. கிழக்கு, சித்தன் கேணி, என்னும் முகவரியைச் சேர்ந்த நமசிவாயம் தவச்செல்வன் என்பவரது தேசிய அ. அட்டை (821682304IV), விசேட அ. அட்டை (090402172) இரண்டும் தொல்புரத்திற்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "ஈஸ்வரிபற்றிசாச்" வழக்கம்பரை, தொல்புரம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (75515)

---

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மனோகரன் உமாசக்தி என்பவருடைய தேசிய அ. அ. [இல-786954045 V] யும் விசேட அ. அட்டை [இல-090423127] யும் 15/04/2000 அன்றுஇல,789, அராலி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். குகன் பல்பொருள் களஞ்சியம், பஸ் நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது மேற்கூறிய முகவரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். (75512)

### படிவம்

சுகாதார சேவைத்திணைக்களத்தின் பதவிகளுக்கான பயிற்சியாளர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. விண்ணப்ப முடிவு திகதி 05/05/2000 படிவ அளவு $A^4$ -4 பக்கம் வர்த்தமானி பார்வைக்கு உண்டு. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட் 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/11891)

### O/L கணிதம்

அடிப்படையிலிருந்து விசேட திறமைப் பெறுபேறுகளை நீங்கள் பெற்றிட தனிப்பட்ட முறையிலோ சிறு குழுக்களாகவோ கணிதம் I, II இலகுவான முறையில் கற்பிக்கப்படும். திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். பெற்றோருடன் வந்து தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு:- Kana Pararajase-Karan, 8 A, பிலேச்சர் ஒழுங்கை (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்), சுண்டுக்குளி. (75539)

### விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் 10 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிகவிவரங்களுக்கு: ஆர். பஞ்சேந்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி அருகில்) மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். [சி/11893]

---

1½ மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (ஆண், பெண் நிறம்- கறுப்பு,பிறவுண்) தொடர்பு: கு. சதானந்தன் 5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [75529]

### வேலையாள் தேவை

பூக்கன்றுகளைப் பராமரித்து சமையல் செய்யக்கூடிய பெண் தேவை. சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும் தங்கி இருக்க வசதி உண்டு. தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75534)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962 இல் பிறந்த உத்திராட நட்சத்திர 25 கிரகபாவமுடைய லண்டன் அரசாங்கத்தில் பொறியியலாளராகக் கடமை புரியும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. பட்டதாரிகள் விரும்பத்தக்கது. விள. இல. 1042, மே/பா உதயன். (75473)

---

யாழ். இந்து கௌரவ உயர்குல 31 வயது நிரம்பிய செவ்வாய்க் குற்றமற்ற சிங்கப்பூரில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற பொறியியலாளருக்கு (B Sc Eng. Peredeniya MSc. Eng. Singapore) அழகிய படித்த மணப்பெண் தேவை. தொடர்புகளுக்கு விள. இல. 1041, மே/பா உதயன். (75289)

### கண்டெடுக்கப்பட்டது

22-02-2000 அன்று வட்டுக்கோட்டை, அராலி வீதியில் (789 பஸ் பாதையில்), தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கிராம உத்தியோகத்தர், சங்கரத்தை. (75390)

### இறைச்சிக்கோழி

Broilers, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழி சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். [75533]

---

இறைச்சிக்கோழி, புறோயிலர், விறாத்து, கல்பேட்ஸ் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: அப்பன் (யாழ். மீன் சந்தை முன்பாக) (75535)

---

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் இல 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) [75538]

## இதய அஞ்சலி

### அமரர் வைத்திலிங்கம் பொன்னையா

(இளைப்பாறிய அதிபர், யா/ பன்னாலை, சேர் கனகசபை அ. த. க. பாடசாலை)

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்த எங்கள் ஆசான் உயர்திரு. வை. பொன்னையா அவர்கள் 13—04—2000 அன்று லண்டன் மாநகரில் சிவபதம் எய்திய செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன், எமது கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாகச் செலுத்துகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

யா/பன்னாலை சேர் கனகசபை
அ. த. க. பாடசாலை,
தெல்லிப்பழை (75543)

## விண்ணக வாழ்வின்
## 32 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 1947 — 10 — 30

இறப்பு 2000 — 03 — 19

### திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம்

(கைதடி)

அன்பாகவும் பாசமாகவும் மனதில்
களங்கமில்லாக் கனிவுறு சொல்லினாலும்
சிரித்த முகத்துடனும் எம்மை எல்லாம்
வழிநடத்திய அம்மாவே!
உங்களை நாம் என்றும் மறவோம்.

இன்று (19—04—2000) புதன்கிழமை காலை அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெறுவதுடன் மதிய போசன நிகழ்வும் இடம் பெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

வரியப்புலம்,
சுன்னாகம். (75552)

# ரயில் குண்டு வெடிப்பு இன்று அறிக்கை வரும்

கொழும்பு, ஏப்ரல் 19

வவுனியாவில் நிகழ்ந்த ரயில் குண்டு வெடிப்புச் சம்பந்தமான விசாரணை அறிக்கை இன்று சமர்ப்பிக்கப் படும் என்று ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ. வி. கே. வேரகம தெரிவித்தார்.

இது போன்ற குண்டு வெடிப்பு ஒரு வருடத்துக்கு முன்பும் வவுனியாவில் இடம் பெற்றது. அதன் பின்னர் ரயில்களை வவுனியாவில் நிறுத்தி வைக்குமாறு எழுத்து மூலம் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இருந்த போதிலும் இந்த உத்தரவு மீறப்பட்டு அனுராதபுரத்தில் நிறுத்தப்படுவதற்காக அந்த ரயில் சென்று கொண்டிருந்த போதே சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து அத்தியட்சகர் தலைமையிலான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும்—

சேதத்துக்குள்ளான ரயில் பாதை இன்னும் திருத்தப்படவில்லை எனவும்— அனுராதபுர ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு கூறுகிறது. (இ-8)

## மாத்தளையில்
# தப்பிச் சென்ற கைதிகளைப்பிடிக்க பெரும் தேடுதல் வேட்டை ஆரம்பம்

கொழும்பு, ஏப்ரல் 19

மாத்தளையில் நேற்று முன் தினம் சிறைக்காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்ற கைதிகளைப் பிடிப்பதற்கு விசேட பொலீஸ் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாத்தளை நீதிமன்ற வளவிலிருந்து கைதிகள் தப்பிச் சென்ற ஜீப் கலகதெரப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களைக் கைது செய்வதற்குப் பொதுமக்களின் உதவி நாடப்பட்டுள்ளது.

தப்பிச் சென்றவர்களில் இருவர் இராணுவத்தில் பணி புரிந்து விலகியவர்கள்; ஒருவர் பாதாள உலகக் கோஷ்டியுடன் சம்பந்தப்பட்டவர்.

பிரஸ்தாப கைதிகள் பல கொலை; கொள்ளை போன்ற சட்டவிரோதச் செயல்களுடனும் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. (இ-8)

## வெளிமாவட்ட..

[3 ஆம் பக்கத் தொடர்]

[136574ஏ], [143240ஏ], [143240பி], [141854ஏ],

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 18 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(134446ஏ), (138239ஏ), (141226ஏ), (141297ஏ), (141709ஏ), (141724ஏ). (141724பி), (141783ஏ), (141805ஏ), (141805பி), (141805சி), (141805டி), (141805ஈ), (141805எவ்), (141874ஏ), (141874பி), (141874சி), (142120ஏ), (147927ஏ).

### யாழ்ப்பாணம்

(141113ஏ).

### கோப்பாய்

(124093ஏ), (136558ஏ), (136592ஏ). (136592பி), (136653ஏ), (136685ஏ), (136868ஏ), (136868பி), (136868சி), (139883ஏ), (139903ஏ), (139913பி), (139919ஏ), (139919பி), (139921ஏ), (139921பி), (179921சி). (143225ஏ), (143413ஏ), (143413பி).

### நல்லூர்

[136858ஏ], [13685பி8], [140531ஏ[, [140531பி], [141020ஏ], [141114ஏ], [143202ஏ]

### சண்டிலிப்பாய்

[138538ஏ], [138553ஏ], [138553பி], [138553சி], [139682ஏ], [139790ஏ], [139795ஏ]. [141290ஏ], [141339ஏ]. [141420ஏ], [141686ஏ]. [141686பி], [141774ஏ], [141774பி], [141774சி]. [141784ஏ], [141784பி], [141813ஏ], [141813பி[. [142177ஏ].

### தெல்லிப்பழை

(141884ஏ), (142122ஏ).

### உடுவில்

(136575ஏ), (139922ஏ), (141347ஏ), (141347பி), (141347சி). (141347டி), (141347ஈ), (141347எவ்), (141382ஏ).

(143204 ஏ), (143204 பி), (143233 ஏ), (143239 ஏ), (143239 பி), (143241 ஏ), (123398 ஏ) (131733 ஏ), (138246 ஏ), (139567 ஏ), (139567 பி), (139567 சி), (141221 ஏ), (141221 பி), (141232 ஏ), (141232 பி), (141232 சி), (141232 டி), (141232 ஈ) (141233 ஏ), (141233 பி), (141233 சி), (141248 ஏ), (141318 ஏ), (141790 ஏ), (141854 ஏ), (141908 ஏ), (141908 பி), (141908 சி), (க)


## அபூர்வ ஜோதிட நிலையம்

★ மாறாத நோய்களை மாற்றிவிடல்
★ இனிமை நிறைந்த மணவாழ்வு
★ குழந்தை இன்மைக்கான பரிகாரம்

No.UP 304,
ஆலடிச் சந்தி, கந்தர்மடம். (75545)


## கண்ணீர் அஞ்சலி

எமது பரிபாலன சபை முன்னாள் தலைவர்

### அமரர் சி. திருநாவுக்கரசு

அவர்களின் அமரத்துவத்தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்தம் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில்.
கோண்டாவில்.

(75546)

# செய்திக் கொத்து

## குருத்துவ வெள்ளி விழா

வடமராட்சி, ஏப்ரல் 19

பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. எ. இருதயதாஸ் அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழா எதிர்வரும் 25 ஆம் திகதி அவரது சொந்த ஊரான குருநகரில் நடைபெறவுள்ளது. (ஐ-173)

## வீதி விளக்குகள் ஒளிரவில்லை

மந்திகையில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் நீண்ட காலமாக ஒளிராமலிருந்து வருகின்றன.

மந்திகை அரசினர் வைத்தியசாலைச் சந்தி, பிரெஞ்சு வைத்திய நிபுணர்களின் விடுதி, பொது நூல் நிலையம் ஆகியவற்றுக்கு முன்பாக உள்ள வீதியின் விளக்குகளே ஒளிராமல் உள்ளன. (ஐ-173)

## வீடுகள் சேதம்

தென்மராட்சி, ஏப்ரல் 19

எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சுக்களால் வீடுகள் பலசேதங்களுக்கு உள்ளாகி காணப்படுவதாக அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்,

அத்துடன் பல வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் வெளியே வீசப்பட்டிருப்பதாகவும்—

வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டிருப்பதால் பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகவும். —

தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உடுபுடைவை

வடமராட்சி, ஏப்ரல் 19

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைகரவெட்டிப் பகுதிகளில் தங்கியுள்ளோருக்கு பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் உடுபுடைவைகளை வழங்கியது. (ஐ-173)

## நிவாரணம் 50 ரூபாவாக அதிகரிப்பு

தென்மராட்சி, ஏப்ரல் 19

பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்படும் விசேட முத்திரை நிவாரணம் ஐம்பது ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் நூறு ரூபாவாக இருந்த நிவாரணத் தொகை இம் மாதம் தொடக்கம் 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வறுமை நிவாரண ஆணையாளர் பிரதேச செயலகங்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## கூட்டுறவுச் சங்கம் இடமாற்றம்

தென்மராட்சி, ஏப்ரல் 19

பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் கிராமிய வங்கியும் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கொடிகாமத்தில் இயங்கவுள்ளன.

கிராமிய வங்கியில் ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகள் அன்றைய தினம் வழங்கப்படுமென சங்க பொது முகாமையாளர் சி. கணேசலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

## கிராமிய வங்கிகளில் கொடுப்பனவு

வலி-கிழக்கு ஏப்ரல் 17

வலி. கிழக்குப் பிரதேச மக்கள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளை தத்தமது பகுதி கூட்டுறவுக் கிராமிய வங்கிமூலமாகவே பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார்

ஏற்கனவே இக்கொடுப்பனவுகளை வேறு வங்கிகளில் பெறுவோரை கிராமிய வங்கிகளில் புதிதாகக் கணக்குகளை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தும்படி அவர் கிராம அலுவலர்களைக்கேட்டுள்ளார்.

(ஐ-180)

## தபாலுறை தட்டுப்பாடு

திருநெல்வேலி. ஏப்ரல் 19

யாழ். பிரதம தபாலகத்தில் முத்திரை பொறித்த மஞ்சள் நிற தபால் உறைகளுக்கு அடிக்கடி தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (ஐ-135)

## சிற்றூழியர் பற்றாக்குறை

திருநெல்வேலி, ஏப்ரல் 19

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் பெண் சிற்றூழியர்களுக்கும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஆண் சிற்றூழியர்களுக்கும் பற்றாகுறை நிலவி வருகின்றது. இவ் வைத்தியசாலைகளில் சிற்றூழியர்களை நியமிப்பதற்கு யாழ். சுகாதார திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத்தெரியவருகின்றது.

(ஐ-135)

## பொது அறிவுப் போட்டி

வடமராட்சி, ஏப்ரல் 19

அல்வாய் வடக்கு சக்கோட்டை புனித சவேரியார் ஆலய இளைஞர் மன்றம் பொது அறிவை வளர்க்கும் நோக்குடன் பொது அறிவுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை பங்குத் தந்தையின் அனுசரணையுடன் நடத்தப்படும் இப் போட்டிகளுக்கான விண்ணப்ப இறுதித்தினம்இன்று 19 ஆம் திகதி ஆகும். (ஐ:173)

## சைக்கிள் திருட்டு

கொக்குவில், ஏப்ரல் 19

வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய லுமாலா ஆண்கள் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை—புதுவருடப்பிறப்பன்று திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை—

கடந்த வாரம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெண்கள் சைக்கிளும் திருடப்பட்டுள்ளது. (ஐ-69)

## மேதின ஏற்பாடு

நெடுந்தீவு, ஏப்ரல் 19

14 தொழிற்சங்கங்கள் இணைந்துள்ள வட இலங்கை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு எதிர்வரும் மே முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழக கூட்டமைப்பின் தலைவர் எஸ். தவராஜா தலைமையில் மேதினக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

# அமைய சுகாதார தொழிலாளர்கள் 66 பேருக்கு நிரந்தர நியமனம்

திருநெல்வேலி, ஏப்ரல் 19

யாழ். சுகாதார திணைக்கள நிறுவனங்களிலும் யாழ். பிராந்தியத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் அமைய சுகாதாரத் தொழிலாளர்களாகக் கடமையாற்றி வருபவர்களில் 66 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குக் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் கடிதம் திருகோணமலையில் உள்ள வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளருக்குக் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை—

யாழ். பிராந்திய அரச வைத்தியசாலைகளில் அமைய சாதாரண தொழிலாளர்களாகப் பணியாற்றி வரும் 10 பேருக்கும் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது பணியாற்றிவரும் நிறுவனங்களில் நிரந்தர ஊழியர்களாகத் தொடர்ந்தும் பணிபுரிந்துவருவார்கள் என்று யாழ். சுகாதாரத்திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார்.

(ஐ-135)

## மரண விசாரணை

நெல்லியடி, ஏப்ரல் 19

கடந்த ஞாயிறன்று பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் வசந்த மண்டபத்திற்கு அருகில் அடிகாயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்ட இளைஞனின் சடலம் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் அ. க. நடராஜா சடலம் காணப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.

அதன் பின் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவ மனையில் பதில் நீதிவான் மரண விசாரணைகளை மேற்கொண்டார். அங்கு, பொலிகண்டி கந்தவன சுவாமி கோவில் ஆதீனகர்த்தா செல்வி பார்வதி அம்மா செல்லையாபிள்ளை (வயது 78) ஆலய பிரதம குரு சந்தானராம சர்மா வைத்திய சர்மா (வயது 48) ஆகியோர் சாட்சியமளித்தனர். இதனையடுத்து மேற்படி சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாளுக்கு உத்தரவிட்டார். (ஐ-109)

## இலவச சிகிச்சை

சண்டிலிப்பாய். ஏப்ரல் 19

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை முகாமில் 135 பேருக்கு இலவச பரிசோதனையும், வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி லயன் டாக்டர் எஸ். அருமைத்துரை, லயன் டாக்டர் சோ. சுந்தரராஜன் ஆகியோர் வைத்திய பரிசோதனையை நடத்தினர்கள்.

எஸ். எம் பெர்னாண்டோ நிறுவனத்தினர் இலவச கண் பரிசோதனையை மேற்கொண்டபோது 52 பேருக்கு 'கற்றாக்' பூவிழிப்படலநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கண்பார்வை குறைந்தவர்கள் என்று கண்டறியப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்ப்பட்டது.

(ஐ-135)

## இக்கட்டான சூழலிலும்

# மக்களின் தேவைகளை அறிந்து அதிகாரிகள் செயற்பட வேண்டும்

### விளையாட்டு விழாவில் உரை

அரசாங்க அதிகாரிகள் மக்களின் தேவைகளை அறிந்து இக்கட்டான போர்ச் சூழலிலும் சேவையாற்ற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ. பி. டி. பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன்.

மூளாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும், மூளாய் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்திய மெய்வல்லுனர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய போர்ச் சூழலில் மக்கள் நலிவுற்று உளவியல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற இவ் வேளையில் இப்படியான விளையாட்டுப் போட்டிகள் மக்களுக்கு ஒரு புத்தூக்கத்தையும் புத்துணர்ச்சியையும் ஊட்டும் என்பது எனது நம்பிக்கையாகும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கூறுவர்.

மக்களின் அன்றாட தேவைகளையும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தையும் நான் உணர்கிறேன். எனவே வட்டுக்கோட்டைத் தொகுதியின் அபிவிருத்திக்கும் ஆக்கத்துக்கும்நானும்என் சார்ந்தஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் இறுதிவரை உழைப்போம் என்பதனை உங்கள் முன் கூறி வைக்க விரும்புகிறேன்—

என்று அவர் அங்கு தெரிவித்தார். (ஐ-7)

# நீண்டகாலமாக இங்கு திரிபோஷா மா வரவில்லை

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பில் இருந்து கடந்த பல மாதங்களாக 'திரிபோஷா' மாபக்கற்றுகள் அனுப்பி வைக்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போஷாக்கு குறைந்த நிலையிலுள்ள கர்ப்பிணி தாய்மாருக்கு, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைப் பிள்ளைகளுக்கும் திரிபோஷா மா வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே. திரிபோஷா மாவை இங்கு அனுப்பி வைக்குமாறு யாழ். சுகாதார திணைக்களம் மேலிடத்திற்கு முறைப்படி அறிவித்தும் கடந்த பல மாத காலமாக அது இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது. (ஐ-135)

## யாழ். விளையாட்டு வீரர்கள்

# மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்ற நிதி உதவி இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ்ப்பாணத்தில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் விளையாட்டுக்களில் தெரிவு செய்யப்படும் வீரர்களை மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்ற அழைத்துச் செல்வதற்கு நிதியுதவிகள் எதுவும் வழங்கப்படுவதில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் விளையாட்டுக்களான கூடைப்பந்தாட்டம் (ஆண், பெண்), வலைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டி ஆகியவற்றில் தெரிவு செய்யப்படுவோரை மாகாண மட்டப் போட்டிக்கு அழைத்துச் செல்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சிடம் நிதி உதவி கேட்கப்பட்டபோதும் இதுவரையும் எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை என்று விளையாட்டுத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இம்மாதத்துடன் மாவட்ட மட்ட விளையாட்டுக்கள் யாவும் யாழ்ப்பாணத்தில் முடிவடைந்து விடும் இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் இவர்களது பயணத்திற்கு நிதி ஒதுக்கப்படாமையினால் மாகாண மட்டத்தில் இவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த முடியாத நிலையேற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

# மூன்று சமுர்த்தி வலயங்களாக கிராம அலுவலர் பிரிவுகள்

கொக்குவில், ஏப்ரல் 19

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 40 கிராம அலுவலர் பிரிவுகளும் மூன்று சமுர்த்தி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஜே 89, ஜே 90, ஜே 91, ஜே 92, ஜே 93, ஜே 94, ஜே 95, ஜே 96, ஜே 106, ஜே 109, ஜே 111, ஜே 112 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் வலயம் I இலும் —

ஜே 115, ஜே 116, ஜே 117, ஜே 118, ஜே 119, ஜே 120, ஜே 121, ஜே 122, ஜே 123, ஜே 124, ஜே 125, ஜே 126, ஜே 127, ஜே 128 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் வலயம் II இலும் —

ஜே 97, ஜே 98, ஜே 99, ஜே 100, ஜே 101, ஜே 102, ஜே 103, ஜே 104, ஜே 105, ஜே 110, ஜே 113, ஜே 114 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் வலயம் III இலும் அடங்கும். (இ-69)

# வெளியேறிய மக்கள் மீண்டும் சென்று பொருள்களை எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

பளைப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து அவசரமாக வெளியேறிய மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் சென்று அங்குள்ள தமது அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருகின்றனர்.

இவர்கள் தமது பொருள்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்து வருவதற்கான அனுமதிப்பத்திரம் பளைப் பிரதேச செயலரினால் மீசாலை சுமநலசேவை நிலையத்தில் இயங்கும் பிரதேச செயலரின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

பளைப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு வீடுகட்டும் பொருள்கள் வழங்கப்பட்டன. அங்கு ஆரம்பித்துள்ள யுத்த நிலையை அடுத்து வீடுகள் கட்டுவது தடைப்பட்டதுடன் இடப்பெயர்வின் போது அப்பொருள்களையும் அப்படியே விட்டுவிட்டு மக்கள் வெளியேறி இருந்தனர்.

சிமெந்து உட்படக் குறிப்பிடத்தக்க வீட்டுப் பொருள்கள் அனைத்தும் பளையிலிருந்து தற்பொழுது மிருசுவிலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் பளைக்குச் சென்ற பளைப் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி தமது அலுவலக ஆவணங்கள் மற்றும் தளபாடங்களைப் பளைக்கு வெளியே கொண்டு வந்துள்ளார்.

அன்றைய தினம் மாசார் பகுதியிலிருந்து ஒன்பது குடும்பங்கள் இராணுவத்தினரின் அனுமதியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன. (இ-ரி

## இடம்பெயர்ந்தோருக்கு உடுபுடைவைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உடு புடைவைகள் பளையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கென வழங்கப்பட்டுள்ளன.

பளைப் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணியிடம் இந்த உடுபுடைவைகள் கையளிக்கப்பட்டன.

மேலும் அடுத்த கட்டமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு புடைவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இளைஞர் சம்மேளன நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர்.


# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
## சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை

அன்னை மடியில் 28-01-1931 — ஆண்டவன் அடியில் 20-03-2000

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
எல்லோரும் போற்ற இன்புடன் வாழ்ந்திர்
எம்மை விட்டுப் பிரிந்தாலும் — என்றும்
உங்கள் நினைவு எம்முடன் நிலைக்கும்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமக்கு ஆறுதல் கூறியும் மற்றும் பல வழிகளில் எமது தேவை அறிந்து உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (19—04—2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சிறீதரன், சி. சிறீநாதன் (மக்கள்)
சீ. தர்மரட்ணம் (மருமகன்)

நீதிமன்ற வீதி, மல்லாகம். (75528)



# வாழ்த்துகின்றோம்

வலிகாமம் மேற்கு (சங்கானை)
பிரதேச செயலகக் கட்டடத்
## திறப்பு விழா

மக்களால் மனமுவந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்த ஆதனத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வலிகாமம் மேற்கு, பிரதேச செயலகக் கட்டட (சங்கானை பஸ் நிலையம் அருகில்) திறப்பு விழா (இன்று) 19-04-2000 புதன் கிழமை இடம்பெற உள்ளது.

இந்த நன்னாளில் எமக்கு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்து, இந்தச் செயலகக் கட்டடம் நிறைவு பெற, முழு மனதுடன் பங்காற்றி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும், மக்கள் சார்பிலும், எமது அமைப்பின் சார்பிலும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தச் செயலகம் சிறப்புடன் செயற்பட எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

சங்கானை சமூகசேவை அமைப்பு

(சி/11895)



### ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 28—04—2000 ஆம் திகதி மாலை 3.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம். 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்த காரர்களிடமும், பொதுஸ்தாபனங்களிடமும் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடிதவுறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 04—05—2000 பிற்பகல் 1.00மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.
04. கேள்விகள் 04—05—2000 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
06. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. காரைநகர் சாம்பலோடை சுடலை வீதி திருத்த வேலை | 5000/- | 500/- |
| 02. கொள்களம் அமைப்பு வேலை 2 ஆம் கட்டம் | 5000/- | 500/- |
| 03. பவுசர் பாதுகாப்புக் கொட்டகை அமைத்தல் | 3500/- | 350/- |

ந. மதனராஜா
ஜே. பி. யு. எம்.,
தலைவர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

ஊர்காவற்றுறை, பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.
19—04—2000

(சி/11894)



# பொதுக்கூட்டம்
## நல்லூர் வணிகர் கழகம்

அன்பார்ந்த வர்த்தகர்களே!

கடந்த 02 - 04 - 2000 ஆண்டு நிகழ்ந்த பொதுக் கூட்டத்தில் வர்த்தகர்கள் பெருமளவில் சமுகம் தராத பட்சத்தில் பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்பதைத் தெரிவிப்பதுடன் எதிர்வரும் பொதுக்கூட்டத்திற்கு தயவு செய்து குறிக்கப்பட்ட நேரத்தில் சமுகம் தரும்படி மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் :- Y.M. H. A. திருநெல்வேலிச் சந்தி
காலம் :- 29 - 04 - 2000 சனிக்கிழமை
பிற்பகல்(புதிய நேரம்)4. 00 மணி

நல்லூர் வணிகர் கழகம் நிர்வாகத்தினர்.
(75531)



# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 — 11 — 1965



உதிர்வு 19 — 04 — 1998

## அமரர் வல்லிபுரம் ஜெயராசன்
(அப்பன்)

ஆண்டது இரண்டு ஓடித்தான் போனாலும்
மாண்டுதான் போகுமா உங்கள் நினைவுகள்?
ஆண்டாண்டு அழுதாலும் இவ்வுலகில்
மாண்டார் தான் வருவாரோ?

உங்கள் பிரிவால் துயருறும்
– குடும்பத்தினர்.

மில் லேன், மல்லாகம். (75536)

# காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேகச் சிறப்புமலர்



## 19-04-2000

### நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

விநாயகர் அடியார்களே!

காரைநகர் புளியங்குளம் அருளானந்த விநாயகப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். ஓர் ஆலயத்தில் பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறை மகாகும்பாபிஷேகம் நிகழ்வது வழமை. இந்தக் கும்பாவிஷேக விழாவை நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தப் பெருமான் தமது தேவாரப் பதிகத்தில் "பெருஞ்சாந்தி விழா" எனக் குறிப்பிட்டுள்ளார். பழைமையும் பெருமையும் வாய்ந்த காரைநகரில் சைவ ஒழுக்க சீலர்களும் ஆசார சீலர்களும் நிறைந்து விளங்குவது சிறப்பான ஒன்று. இவ்வூருக்கு ஆலயங்கள் பல பெருமையைச் சேர்த்துள்ளன. அந்த வரிசையில் இந்த விநாயகர் ஆலயமும் ஒன்றாக மிளிர்கின்றது.

விநாயக வழிபாடு சைவ சமயத்தில் இன்றியமையாததாகும். அந்த விநாயகப் பெருமானை வணங்கிக் காரியத்தைத் தொடங்கினால் அந்தக் காரியம் வெற்றியாகவே அமையும். ஆகவே இன்று கும்பாபிஷேகம் பெறும் இந்த ஆலய தரிசனத்தினால் அனைவரும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிறைந்து விளங்க வேண்டுமென்று நல்லைக்குருமணியின் பாதங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்
**2ஆவது குருமகாசந்நிதானம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

### தமிழ்நாடு தாம்பரம்
### ஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்களின் அருளாசி

சகல ஆன்மாக்களும் உய்யும் வண்ணம் ஓங்கார வடிவமாய் எழுந்தருளி எல்லாமக்களும் ஒற்றுமையுடன் வாழவும், நல்லவாக்கு, நல்ல மனம், பொருள் உண்டாகவும் மேற்படி ஆலயத்தில் 19-04-2000 ஆண்டில் மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்று எல்லோரும் உளம் நிறைந்த வாழ்வு பெற ஆசி கூறுகின்றேன்.

ஸர்வஸாதக திலகம்
தே.சு.முத்துக்குமாரசாமிக் குருக்கள்
**14, கற்பக விநாயகர் ஆலயம்**
**கிழக்கு தாம்பரம், சென்னை - 59.**

### சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசிச் செய்தி

"ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்விப்பாம்" என்பது அருளாளர் வாக்கு. சைவமக்களின் முதல் வழிபாட்டுக்கு உரியவராகிய விநாயகப் பெருமானுக்கு புராணங்களும், இதிகாசங்களும், பக்திப் பாசுரங்களும் முதல் வணக்கம் கூறி ஆரம்பித்து வைப்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கிறோம்.

*"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்*
*சரண அற்புத மலர் தலைக் கணிவேமே"*

என்பதை நாளும் பொழுதும் நாநவின்றேத்தி நிற்கின்றோம்.

எல்லாக் கருமங்களையும் விக்கினமின்றி நிறைவு செய்பவர் விநாயகப் பெருமானே என்பதனை யாவரும் அறிவர்.

அற்புதம் நிறைந்த அருளாநந்தப் பிள்ளையார் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் இடம் காரைநகர் புளியங்குளம் பகுதியாகும். மருதநிலச் சூழலில் அமைந்து காட்சி தரும் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். இன்று 19-04-2000 புதன்கிழமை குடமுழுக்கு நடைபெறுவது குறித்து உள்ளம் பூரிப்படைகிறது.

*"பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்"* என்ற திருமுறை வாக்கை உள்ளத்திருத்தி அருளானந்தப் பிள்ளையாரை வணங்கி ஆனந்தம் அடைவோமாக

வணக்கம்

சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.
**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

### கும்பாபிஷேகப் பிரதம குருவின் அருளாசி

சைவமக்களுக்கு ஏற்பட்ட இன்னல் காரணமாக மக்களும், வீடுகளும், ஆலயங்களும் சீலமடைந்த நிலையில் வேதனைப்பட்ட நிலையை, இறைவன் அனுக்கிரகத்தால் மாற்றி இன்று புளியங்குளம் விநாயகர் ஆலயத்தை புதுக்கி அமைத்து கும்பாபிஷேகம் நடத்தத் திருவருள் கிடைத்துள்ளது. அத்திருவருளுடன் பக்தப்பெருமக்களின் அபிலாசையும் சேர்ந்து உதயமாகி, சித்திரைத் திங்கள் 7ஆம் நாள் இன்று (19-04-2000) புதன்கிழமை மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுகின்றது. இவையாவும் விநாயகர் அருளால் சிறப்புற நடை பெற்று மக்கள் மனக்கவலை, துன்பம் துயர் நீங்கி மறுவாழ்வு பெற்றதாக உளம்பூரித்து நல்வாழ்வு பெறவேண்டியதை உலக மக்களுக்கு எமது பிரார்த்தனையையும், நல்லாசிகளையும் கூறுகின்றேன்.

சுபம்.

பிரதிஷ்டா சிரோன்மணி
சாமி. விஸ்வநாதக் குருக்கள்

### அனைத்தும் ஐயன் அருள்

என் குலம் காத்த விநாயகனுக்கு இன்று கும்பாபிஷேகம். நினைக்க நெஞ்சுருகி மெய் சிலிர்க்கின்றது! இந்த அரிய காரியத்தில் எங்கள் அருளானந்தப் பிள்ளையார் செய்த அற்புதம் ஏராளம். நாங்களா கும்பாபிஷேகம் செய்கிறோம்? ஒரு நாளும் இல்லை. தனக்குமேல் ஒரு தலைவன் இல்லா அத்தனிநாயகன் விநாயகன் எங்களைக்கொண்டு தனக்குத்தானே கும்பாபிஷேகம் நடத்துவிக்கின்றான். அதுதான் உண்மை. இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் அப்பிரணவருபன் பெயர் சொல்லி கோயில் அமைப்பதும் கும்பாபிஷேகம் செய்வதும் மனித முயற்சியால் சாத்தியமா? அந்த ஐங்கரன் அருளே அனைத்தையும் சாதித்தது. இவ்வருப்பணியில் ஐங்கரன் என்னையும் ஆட்கொண்டது என்முன்னைத்தவப்பயன். இல்லையில்லை என் குலம் முழுதும் செய்த தவம் பாட்டன் அமைத்த ஆலயத்துக்குப் பணியாற்றி கும்பாபிஷேகம் காண நான் செய்த புண்ணியம் என்னவோ? இவ்வற்புதகாரியம் அமையத் துணைசெய்த அத்தனை நெஞ்சங்களினதும் அடிபணிந்து வணங்குகின்றேன். கடல்கடந்து வாழும் அன்பரெல்லாம் கண்ணீரோடு தம்மனக்கண்ணில் இன்று கும்பாபிஷேகக் காட்சி கண்டு மகிழ்வர். ஐங்கரன் அனைவர்க்கும் அருள்வான்.

செயலாளர் என்.சண்முகநாதா.
**காரைநகர் புளியங்குளம் அருளானந்தப்பிள்ளையார் ஆலய நிர்வாகசபை**

## இயற்கை எழில் பொலியும் சூழலில் அமர்ந்து அருள் சுரக்கும் அருளானந்தப் பிள்ளையார்

கோவிலும் குளமும் ஒருங்கமைந்து முன்னே மருதமரங்கள் பரந்து நிழல் தர வயல் சூழ்ந்த அழகிய கண்கவர் புண்ணியஸ்தலமே காரைநகர், புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் ஆலயம். மூர்த்தி, தலம், தீர்த்தத்தால் சிறப்புப் பெற்ற தலம் இது.

அந்நியர் ஆட்சியிலே ஆலயங்கள் கவனிப்பார் அற்ற நிலையிலும் கூட, அபிமானிகள் தம் சமய உணர்வை வெளிப்படுத்தத் தவறவில்லை. மரநிழல்கள் வழிபாட்டு இடங்களாக மாறின. மருதமரமும் வழிபாட்டு இடமாக மாறி அங்கே மக்கள் முழுமனதோடு வழிபாடு ஆற்றி வந்தனர். வயல் சூழ்ந்த கிராமம் ஆதலால் பொங்கல் பூசைகளுக்கும் குறைவில்லை.

இந்நிலையில் மக்களின் சமய உணர்வைப் பேணிப் பாதுகாக்கும் நல்ல நோக்குடன் அவ்வூர் சைவ வேளாண் குலதிலகமும், காரைநகர் மேற்கு விதானையார் என்று அழைக்கப்படும் பெருமதிப்புக்கு உரியவருமாகிய அமரர் பரமானந்தம் சண்முகம் அவர்கள் வெளிநாடுகளில் சென்று நிதி திரட்டி அவ்விடத்திலே ஆலயம் ஒன்றை சமயாசார முறைப்படி அமைப்பித்தார். அவ்வாலயமே காரைநகர், புளியங்குளம் - அருளானந்தப் பிள்ளையார் என்ற பெயருடன் விளங்கும் ஆலயம்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயத்தின் இருமருங்கிலும் குளமும் கேணியும் உண்டு. முன்னர் குளத்தின் ஒரு பகுதி கேணியாகவும் மறுபகுதி கிணறுமாக விளங்க, நடுவே ஆலயம் கட்டப்பட்டதாகவும் கேள்வி வழியாக அறிந்தோம். விதானையார் பரமானந்தர் சண்முகம் அவர்கள் கோயிலை அமைத்தவுடன் நின்று விடாது நித்திய பூசைக்காக ஏராளமான வயல் நிலங்களையும், பனந்தோட்டங்களையும் குடியிருப்புக்காணிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளார். அதனால் கோயிற் பூசைகள் எக்காலத்தும் முட்டின்றி நடந்தன.

வயல் சூழ்ந்த கிராமம் ஆதலால் நித்திய பூசைக்கு வேண்டிய அரிசி முதலியவற்றை அவ்வூர் மக்களே மனமுவந்து வழங்கினர். மக்களே முன்னின்று கோயில் பணி புரிந்தனர். தினமும் இருவேளை காலை, மாலை பூசை தவறாது நடைபெற்று வந்ததுடன் சதுர்த்தி, பிள்ளையார் கதை முதலியன மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. அந்நாள்களில் சுவாமி வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பக்தர்கள் புடைசூழ, வாத்தியங்கள் முழங்க, பஜனைப் பாடல்கள் ஒலிக்க, பூக்கள் மாரிபோல சொரிய பிள்ளையார் வீதிவலம் வருவார். பூந்தோட்டம் ஒன்று தனியாக இருப்பதுடன் கோயில் வீதியெங்கும் பூத்துக் குலுங்கியபடி மரங்கள் நிறைந்திருப்பதுடன் அல்லி, அறுகு ஆகியவற்றுக்கும் குறைவில்லை. ஆலயத்திலேயே நீர்த்தொட்டி அமைக்கப்பட்டு அல்லி, ஆம்பல் ஆகியன வளர்க்கப்பட்டன. வன்னி, நெல்லி முதலிய மரங்களும் சூழ்ந்து! அதாவது நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ ஆகியன நிறைந்து இயற்கை அழகுடன் பொலிந்து விளங்கும் தலம் இதுவாகும் வன்னி மரத்திற்கு இன்றும் தீபம் காட்டி பூசை செய்யப்படுகிறது வன்னி மரம் பழைமையின் சின்னமாகப் போற்றப்படுகிறது.

பரமானந்தர் சண்முகம் அமரத்துவம் எய்திய பின்னர் அவரது பணியை அவரது மகனும் அவ்வூர் விதானையாருமாகிய சண்முகம் பொன்னம்பலம் தொடர்ந்து பல வருடங்களாகச் செய்து வந்தார். அவரது காலத்தில் ஆலயம் மேலும் புதுமெருகு பெற்றது. ஆலயப் பணியில் தனது கவனத்தை முழுமையாகச் செலுத்தி பூந்தோட்டத்திற்கு நீர் இறைத்தும், குளத்தை வருடாவருடம் சுத்தப்படுத்தியும், நித்திய பூசைகள் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டும் வந்தார். காலையும், மாலையும் தவறாது கோயிற் தொண்டு செய்து, நீராடி பூசை முடித்து வந்தே நித்தியக் கடமையில் ஈடுபட்டார். பிரதி வெள்ளிக் கிழமைகளிலும் சுவாமி வீதி வலம் வருவது நியதி. மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, விநாயகர் சஷ்டி, சதுர்த்தி போன்ற தினங்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வந்தார்.

சண்முகம் பொன்னம்பலம் அமரத்துவம் எய்திய பின்னர் அவரது தம்பியும், இளைப்பாறிய அப்போதிக்கருமாகிய சண்முகம் நடராசா அவர்கள் அப்பணியைத் தொடர்ந்து தவறாது செய்து வந்தார். காலையும், மாலையும் பிள்ளையாரைத் தவறாது வழிபடும் நியமம் பூண்டவராக ஒழுகி வந்தார். அளவிறந்த பக்தி உடையவர். முப்பெய்தி தளர்வடைய அவரது பணியை விதானையார் சண்முகம் பொன்னம்பலத்தின் மகனும் ஓய்வு பெற்ற நில அளவையாளருமாகிய பொன்னம்பலம் வேதாசலம் அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார். பிள்ளையார் விதானை குடும்பத்துக்குரிய குலதெய்வம் மட்டுமன்றி அப்பகுதி வாழ் மக்களுக்குரிய குல தெய்வமும் ஆகும் எனவே எந்த வித வேறுபாடும் காட்டாது எல்லா மக்களும் ஒன்றாகக் கலந்து கோயிற் தொண்டு புரிந்தனர். கோயில் மேலும் பொலிவு பெற்றது. மாதப்பிறப்பு பூசை, திருவெம்பாவைப் பூசை என்பன மங்கள வாத்தியம் முழங்க நடைபெற்றன. மார்கழி மாதம் முழுவதும் உஷத்காலப் பூசையும் இடம்பெற்றது. வருஷப் பிறப்புக் கருமம் மருத்துநீர் வழங்கும் பணி ஆகியன பல வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்றன.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். எனினும் அங்கு நின்றவர்கள் கற்பூரம் கொளுத்தியும் விளக்கு வைத்தும் வழிபாடாற்றி வந்தனர். கோயிற் பூசைகள் இடம் பெறவில்லை. மரங்கள் செழித்து வேரோடிக் கட்டடங்கள் பழுதுபட்டன.

இடம்பெயர்ந்து வேறு வேறு இடங்களில் குடிபெயர்ந்த நிலையிலும் பிள்ளையாரை யாரும் மறக்கவில்லை. பிள்ளையாரும் அடியார்கள் தன்னை மறக்கவிடவுமில்லை. அடியார்கள் ஒன்றிணைந்து கோயிலைப் புனருத்தாரணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இப்பணியில் பொறியியலாளர் தம்பையா சிவானந்தன், கிராம சேவையாளர் திருநாவுக்கரசு, ஸ்ரீஸ்கந்தராசா(பண்டிதன்) ஆகியோர் முன்னின்று உழைத்தனர். விநாயகர் தோன்றாத் துணையாயிருந்து அவர்களைத் தூண்டுவிக்க நடராசா சண்முகநாதா, பொன்னம்பலம் வேதாசலம் ஆகியோர் முழுமூச்சாக எப்படியும் செய்து முடிக்கவேண்டிய பணி என்பதை உணர்ந்து விதானையார் குடும்பத்தவர்களாகிய அருளம்பலம் யோகேந்திரா, நமசிவாயம் பாலசண்முகம், அமரர் டாக்டர் பரமநாதர் பாலச்சந்திரா ஆகியோர் ஒன்றிணைந்து அதற்கான நிதியைத் திரட்டி இப்பணி முட்டின்றி நிறைவேற வேண்டிய ஒழுங்குகளைச் செய்தனர். எல்லாம் வல்ல அருளானந்தப் பிள்ளையாரின் அருளால் நிதியும் வந்து குவிந்தது. பாலஸ்தாபனமும் முடிவுற்றது. இன்று மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேறுகின்றது.

*"நம்பிக்கைக்குத் தும்பிக்கை துணை"*

### மங்களம் கண்டு மகிழ்வோம்

காரைநகர் புளியங்குளம் அருளானந்தப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகச் செய்தி கேட்டு மனம் மகிழ்கிறேன். தெய்வம் மறவாமை நம் தமிழினத்தின் தனிக்குணம். எங்கெங்கோ வாழ்ந்தும் தம் குல தெய்வத்தை மறக்காமல் கும்பாபிஷேகம் காணும் அன்பர்கள் பாராட்டுக்குரியவர்கள். தன் விடாமுயற்சியாலும் ஆழ்ந்த பக்தியாலும் இவ்வரிய காரியத்தை அன்பர் என்.சண்முகநாதா அவர்கள் சாதித்திருக்கின்றார்கள்.

*ஐங்கரன் அருளால் அனைவர்க்கும் வினை தீரும்.*
*மங்களம் கண்டு மகிழ்வோம்.*

அன்பன்
இ.ஜெயராஜ்
**கம்பன் கழகம்.**

### நேரடி அஞ்சல்

காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேக நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையிலும் வானம்பாடி ஒலிபரப்புச் சேவையிலும் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நேரடி ஒலிபரப்புச் செய்யப்படும்.

### நன்றிகள், நன்றிகள்!

எங்கள் அருளானந்தப் பிள்ளையார் தேவஸ்தான மகா கும்பாபிஷேகத்துக்கு தலைமை வகித்து, சிறப்பாக, நல்லபடி நடத்த வருகை தந்த ஆயிரம் பிறை கண்ட மகான் சிவஸ்ரீ நவாலி சாமி விசுவநாதக்குருக்களுக்கும் அவரின் பரிபாருக்கும், தமிழகம் சென்னை தாம்பரம் முத்துக்குமாரசுவாமிக்குருக்களுக்கும் மற்றும் சிவாச்சாரியர்களுக்கும் எமது ஆலயத்தை மிகச் சிறப்பாக நல்லபடி திருப்பணி வேலை செய்த ஸ்தபதி, ஆசாரியார்கள் மற்றும் பாரத நாட்டில் இறக்குமதி செய்த மாபிள்களை நல்லபடி பதித்த சிற்பாசாரியர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

ஆலயத்தொண்டில் ஈடுபட்டுள்ள எமது இளைஞர்களும் மற்றும் வெளிநாட்டிலும் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள விநாயகரின் பக்தர்களும் தந்த அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் பாராட்டுதற்குரியன போற்றுதற்குரியன.

கும்பாபிஷேக நிகழ்வுகளை அஞ்சல் செய்ய ஏற்பாடுகள் செய்துள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் தொடர்பு ஸ்தாபனங்களுக்கும் அருளானந்தப் பிள்ளையார் அருளாசி வழங்குவாராக.

ஈற்றில் அருளாசி வழங்கியவர்களுக்கும் வருகை தரும் அடியார்களுக்கும் அன்னதானம், போக்குவரத்து ஒழுங்குகள், திருப்பணி வேலைகள் துரிதமாக, சிறப்பாக நடைபெற அயராது உழைத்த அனைவரினதும் எம் ஆலயத் தொண்டர்களினதும் சேவை என்றும் போற்றுதற்குரியது.

ஆய்வாளர்கள் எம் ஆலயம் அழகாக அமைந்ததை ஆய்வு செய்ய முன்வந்ததற்கும் நன்றிகள்.

சிவாச்சாரியர்கள் கொழும்பில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் வருகைதர உதவிய அனைவருக்கும் விநாயகர் நல்லாசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலைய நிர்வாகத்தினர்,
**காரைநகர்.**

# தென்பகுதி உ.கிழங்கு தடை இந்த மாதத்துடன் நீக்கம்!

யாழ்ப்பாணம்,ஏப்.19

தென்பகுதியில் இருந்து குடா நாட்டுக்கு உருளைக்கிழங்கை எடுத்து வருவதற்குத் தனியார் வர்த்தகர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை இம்மாத இறுதியுடன் நீக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

குடாநாட்டில் உருளைக்கிழங்கின் விலை அதிகரித்து வருவதாகவும் -

கொழும்பில் இருந்து உருளைக் கிழங்கை இங்கு எடுத்து வந்து குறைந்த விலைக்கு வழங்க முடியும் என்றும் -

ஆதலால் தடையை நீக்கும்படியும் -

வர்த்தகர்கள் அரச அதிபரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்து வந்தது தெரிந்ததே.

இதனை அடுத்துக் கடந்த 11 ஆம் திகதி யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற விவசாய உபகுழுக் கூட்டத்தில் உருளைக்கிழங்கை இங்கு எடுத்து வருவதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளர், கோப்பாய்ப் பிரதேச செயலர், நல்லூர்ப் பிரதேச செயலர்,விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கமநல கேந்திர நிலைய் உதவி ஆணையாளர் மற்றும் விவசாய சம்மேளனங்கள், ஒன்றியங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடாநாட்டின் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களின் நன்மை கருதிக் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் மூன்று மாதங்களுக்குத் தென் பகுதியில் இருந்து உருளைக் கிழங்கை இங்கு எடுத்துவருவதற்கு அரச அதிபர் தடை விதித்திருந்தார்.

எனினும் இம்முறை பெய்த அதிக மழை காரணமாக உள்ளூர் உற்பத்திகளின் அறுவடையும் முன்கூட்டியே ஆரம்பமாகியது. அதனால் புதுவருடப் பிறப்பு நாள்களில் கிழங்கின் விலை அதிகரித்துக் காணப்பட்டது.

இதனை அடுத்தே உருளைக் கிழங்குத் தடையை நீக்க முடிவு செய்யப்பட்டது.

தற்போது அரச அதிபர் உருளைக்கிழங்கை எடுத்துவர அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து அடுத்தமாத ஆரம்பத்தில் தென் பகுதி உருளைக்கிழங்கு இங்கு விற்பனைக்குவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-9-10-5)

## தேர்தலுக்கு ஏற்பாடு

கொழும்பு,ஏப்.19

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைவதைத் தொடர்ந்து அடுத்த பொதுத் தேர்தலை நடத்துவதற்கான முன் னேற்பாடுகளைச் செய்வதில் தேர்தல் திணைக்களம் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொறுப்பேற்குமாறு கோரிக்கை

மனநோய்க்கு இலக்காகிய நிலையில் தெல்லிப்பழை மன நோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் இளம் தாய் ஒருவரைப் பொறுப்பேற்குமாறு அவரது உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முகமாலையைச் சேர்ந்ததாகக் கூறப்படும் மேரி றோசா (வயது30) என்பவரையே உடன் பொறுப்பேற்குமாறு தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையின் உளமருத்துவ சமூக சேவையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-7)

## வேணுகான இசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.19

நல்லூர் ஸ்ரீராகவேந்திர மிருத்திகாவின் ஏற்பாட்டில் சுவாமிகள் பிரவேச தினத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேணுகானம் இசை அரங்கம் மிருத்திகா மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் 'ஸ்ரீராக வேந்திர சுவாமிகளின் தரிசன அற்புதம்' எனும் பொருளில் செல்வி புஷ்பா செல்வ நாயகம் சொற்பொழிவாற்றுவார். (க-3)

---

## ராஸிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் கூறின.

இந்தக் கொள்ளையில் ஈடுபட்டதை அவர்கள் ஒப்புக் கொண்டு விட்டதாகப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ராஸிக் குழுப் பொறுப்பாளர் காந்தி ஓர் அறிக்கையை விடுத்துள்ளார்.

"கைதுசெய்யப்பட்ட மூவரும் எமது குழுவிலிருந்து விலகிவிட்டனர். இவர்களுக்கும் எமது அமைப்புக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இல்லை. இவர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடும் தண்டனை விதிக்கவேண்டும்" - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-க-3-21)

## பட்டதாரி ஆசிரியரை சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.19

தமிழ்மொழி மூலம் தகுதிகாண் ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சையில் உரிய புள்ளிகளைப் பெற்றும் வதிவிட வேறுபாடு காரணமாக நியமனம் கிடைக்கப் பெறாதவர்களையும் -

1980ஆம் ஆண்டு பொது வேலைநிறுத்த காலத்திலிருந்து பதவி உயர்வுகளில் பாதிப்புற்று பதவி உயர்வு கிடைக்காமல் தவற விட்டவர்களையும் -

சம்பள நிலுவைகள் பெறுவதில் இடர்படும் பட்டதாரி ஆசிரியர்களையும் -

இன்று காலை 9மணிக்கு யாழ். கல்விவலயம் முன்பாக ஒன்று கூடுமாறு பட்டதாரி ஆசிரியர்கள் நலன் புரிக்கழகம் மற்றும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை என்பன கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. (உ-7)

---

## தொண்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் - அங்கு தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை, வவுனியா மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களும் தாம் நடத்திவந்த உண்ணாவிரதப் போராட்டங்களை நேற்று முன்தினம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர். (உ-7-21)

---

## வெளி விவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் -

யாழ். ஆயருக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இந்தச் சேவை தொடர்பாகத் தகவல் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளதாகத் தெரிய வந்தது.

வழித்துணை வழங்குவது தொடர்பாக விடுதலைப்புலிகளின் எழுத்து மூல இணக்கத்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

அதன் பின்னர் இந்தச் சேவைக்கான வழித்துணை வழங்கப்படும் என்றும் -

யாழ். ஆயருக்கு அனுப்பப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-8)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றுகாலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் கால்இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 17 வயதுப் பிரிவு

* சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

* கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் அச்சுவேலி மகா வித்தியாலயம்.

* புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் எதிர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

### 19 வயதுப் பிரிவு

* ஆவரங்கால் மகாஜனா எதிர் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

* சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

* கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

இந்தச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை அதே மைதானத்தில் நடைபெறும். (இ-4)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு

* வரணி மகா வித்தியாலயம் எதிர் இடைக்காடு மகாவித்தியாலயம். (காலை)

* சாவகச்சேரி மகளிர் கல்லூரி எதிர் சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி. (காலை)

* யூனியன் கல்லூரி எதிர் வட இந்து மகளிர் கல்லூரி. (பிற்பகல்)

* மெதடிஸ்த மகளிர் கல்லூரி எதிர் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி. (பிற்பகல்)

### 17 வயதுப் பிரிவு

* சாவகச்சேரி மகளிர் கல்லூரி எதிர் நெடுந்தீவு றோ. க. பாடசாலை. (காலை)

* வட இந்து மகளிர் கல்லூரி எதிர் கனகரத்தினம் ம.ம.வி. (பிற்பகல்)

* யூனியன் கல்லூரி எதிர் நெடுந்தீவு றோ.க. பாடசாலை. (பிற்பகல்)

* மெதடிஸ்த மகளிர் கல்லூரி எதிர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (பிற்பகல்)

### 19 வயதுப் பிரிவு

* உடுவில் மகளிர்கல்லூரி எதிர் நெடுந்தீவு றோ.க. பாடசாலை. (காலை)

* சுண்டுக்குழி மகளிர் கல்லூரி எதிர் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (காலை)

* நெடுந்தீவு றோ.க. பாடசாலை எதிர் மெதடிஸ்த மகளிர் கல்லூரி. (பிற்பகல்)

காலை ஆட்டங்கள் 8.00 மணிக்கும், பிற்பகல் ஆட்டங்கள் 2.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். (இ-4)


**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவு 3

**O/L DAY CLASS**

ஆரம்பம்: 24-04-2000 (8.30 - 2.00)

- பிரிவு 2 அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
- பிரிவு 4 வெகு விரைவில்.
- தூரதேச மாணவர்கள் நலன்கருதி விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.
- கடமை, கட்டுப்பாடு நிறைந்த ஒரே நிறுவனம்.

*O/L EVENING CLASS*

ஆண்டு 6.7.8.9.10 வகுப்புக்களுக்கான புதிய பிரிவு

ஆரம்பம்: 24-04-2000 (3.15 - 5.30) (75548)



**ஐடியல் அக்கடமி**

சண்டிலிப்பாய்

**O/L DAY CLASS 2000**

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்: 19-04-2000

இன்று காலை 8.00 மணி

கணிதம்:

திரு. V.N.பத்மநாதன்

(C/11898)



**யாழ். இந்து மகளிர் கல்லூரி ~ லியோ கழகம்**

**யாழ். இந்துக் கல்லூரி ~ லியோ கழகம்**

மேற்படி இரு கழகங்களினதும் கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை (20-04-2000) பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

- ஆசிரிய ஆலோசகர்கள்

(C/11901)



இணையற்ற சேவையில்

28 வருடங்களைக் கடந்த நிறுவனத்தில்

**O/L DAY CLASS**

பகல் நேர வகுப்பு

★ வாரத்தில் 5 நாள்கள் காலை 8.30 - 1.30மணிவரை.

★ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த கட்டமைப்பு.

★ மாதாந்த பரீட்சைகள் மூலம் மீட்டல்.

★ அனுபவமிக்க ஆசிரியர்களின் போதனைகள்

செய்முறையுடன் கூடிய விசேடகணித, விஞ்ஞான வகுப்புகள்.

ஏப்ரல் 19இல் ஆரம்பம்

*The Express Institute*

Irupalai, Kopay.

(75477)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாவதி சுப்பிரமணியம்

முருகேசபண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சுப்பிரமணியம் நேற்று (18-04-2000) செவ்வாய்க்கிழமை இரவு சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் ஸ்ரீக்குமரன் (எழுதுநர் இயல்வாணன் - ஆசிரியர், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), ஜெயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவரஞ்சினி (பவானி), சிவனேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீப்பிரியனின் பாசமிகு அப்பம்மாவும் அன்னராசாவின் (ஓய்வுபெற்ற செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.ஸ்ரீக்குமரன்
(மகன்)

*முருகேசபண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.*

(C/11902)

### S.N. நடராஜா

**(Retired Superintendent of Excise, Former Manager for A.Baur & Co. Ltd., Jaffna Branch)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னைய நாகலிங்கம் நடராஜா வியாழக்கிழமை (13-04-2000) அன்று லண்டனில் காலமானார்.

இவர் திரேஸ் பரிமளத்தின் அன்புக் கணவரும், நகுன் (U.S.A.), ராகினி (U.K.), ஜெகதீஸ்பரன் (U.K..), சுரேஸ்பரன் (U.K.) பிரகாஸ்பரன் (U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேராசிரியர் குகேந்திரன் (U.S.A.), பொறியியலாளர் சண்முகநாதன் (U.K.), எட்வினா (U.K.), வத்சலா (U.K.), தேவிகா (U.K.) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-2000) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

தகவல்:
ந.இராஜதேவன்
Asst. Manager,
A.Baur & Co. Ltd.,
Jaffna Branch.

*No. 50, CANNONBURY AVE,*
*TINNER,*
*MIDDLE SEX,*
*HA 51 TS,*
*U.K.*
Phone:- 181-4293071

(75557)

### திருமதி இராசநாயகம் இலட்சுமிப்பிள்ளை

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசநாயகம் இலட்சுமிப்பிள்ளை நேற்று (18-04-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இராசையா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசநாயகத்தின் அன்பு மனைவியும், சபாநாயகம் (வர்த்தகர், குருநகர்), காலஞ்சென்ற காந்தரூபி மற்றும் நீலரோஜினி, தாமரைச்செல்வி ஆகியோரின் தாயாரும், பேபிராணி, பாலசுப்பிரமணியம், மோகன் (பாறின்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற திருமதி தியாகராஜா சிவபாக்கியத்தின் சகோதரியும், தில்லைநாயகத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சபாநாயகம்
(மகன்)

*138/2, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(75558)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.